

ஏப்ரல்-2013
இதயநிலா
IDHAYANILA
APRIL 2013 Vol 3 Issue 10 Rs:15 /- Annual subscription Rs:180
ரூ.15
லட்சுமி பிரபா
5
தவமின்றி கிடைத்த வரமே?

ர[illegible]
முட்டிக் கொண்டு
வந்தது.

இதயம்
பாறாங்கல்லாய் கனத்து
வலித்தது.

துக்கம் பந்தாய்
எழும்பி தொண்டையை
அடைத்துக்
கொண்டிருந்தது.

இமைகளைச்
சிமிட்டி கண்களில்
துளிர்த்திருந்த
கண்ணீரை சிரமப்பட்டு
உள்ளிழுத்துக்
கொண்டாள்.

கட்டிலில்
சயனித்திருந்த அம்மா
செண்பகத்தின் அருகில்
சென்று... அவளது
கால்மாட்டில் மெல்ல
அமர்ந்தாள்.

இளங்கலை படிப்பை
முடித்து விட்டு... கடந்த
இரண்டு மாதங்களாக
பக்கத்தில் உள்ள
தனியார் பள்ளி ஒன்றில்
ஆசிரியையாக வேலை
பார்த்து வந்தாள்.



# தவமின்றி கிடைத்த வரமே...!

■ லட்சுமி பிரபா

இன்று மதியம் உணவு இடைவேளையின் போது... ரத்னாவின் செல் ஃபோனுக்கு அழைப்பு விடுத்து... அவசரமாய் பதற்றமாய் பேசினாள் செண்பகம்.

''ரத்னா! ர...த்...னா...! ஐ...யோ! இ... இப்படியெல்லாம் நடக்கும்னு நா நெனச்சே பார்க்கலையே?

ஆம்பளைத் துணை இல்லாத வீடு... கஷ்டப்பட்டு நாட்களை எப்படியோ நகர்த்திட்டு வந்தேனே? உன்னை ஒருத்தன் கையில் புடிச்சுக் குடுத்துட்டா... என் பாரம் இறங்கிடும்னு இருந்தேனே?

என் தலையில கல்லைத் தூக்கிப் போட்டுட்டானே? என் விதியைப் பார்த்தியா? உங்கக்கா சின்ன வயசிலேயே பூவையும் பொட்டையும் இழந்துட்டா...

உனக்கு நல்ல இடத்துல பேசி நிச்சயம் பண்ணினேன். இப்போ... அந்தக் கல்யாணமே நின்னு போயிடும் போலிருக்கே...

ஐ...யோ!''

மறுமுனையில் அம்மா குரலுடைந்து தேம்பி அழுதாள். ரத்னாவுக்கு பதற்றம் தொற்றிக் கொண்டது.

''அம்மா! திமர்னு என்னம்மா ஆச்சு? மனசைத் தளர விட்டுடாதேம்மா...''

''பழசைப் போட்டு நீ குழப்பிக்காதேம்மா. கண்டதையும் நெனச்சுக் கவலைப்பட்டு உன் உடம்பை ஏம்மா நீ கெடுக்கிறே... நீ எதையுமே நெனக்காதே... துக்கப்பட்டு புலம்பினாலே... டான்னு நெஞ்சு வலி வந்துடுது.

ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிட்டா என்னம்மா பண்றது? என் கதி என்ன? எனக்கு உன்னை விட்டா... வேற யாரு இருக்கா...?''

அம்மாவின் நெஞ்சில் தைலத்தை நீவி விட்டுக் கொண்டே உரிமையாய் கடிந்து கொள்வாள் ரத்னா.

'இப்போது ஸ்கூலுக்கே ஃபோன் செய்து கதறும் அளவுக்கு என்ன நடந்து விட்டதாம்?

துக்கத்தில் பெரிய ஹார்ட் அட்டாக்கே வந்து விட்டால் என்ன செய்வது?

பயம் இதயத்தை முற்றுகையிட்டது.



''அ... அம்மா! நான் உடனே லீவு கேட்டுட்டு... வீட்டுக்குப் புறப்பட்டு வர்றேன். நீ தைரியமா இரு... கடவுள் மேல பாரத்தைப் போடு... நா... இதோ... வந்துட்டே இருக்கேன்...''

செல் ஃபோனை அணைத்து விட்டு... ஹேண்ட் பேக்கை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக பள்ளி அலுவலகத்தை நோக்கி விரைந்தாள்.

அடுத்த அரை மணி நேரத்தில்... அவள் வீட்டை அடைந்து விட்டாள்.

அக்கம் பக்கத்து வீட்டில் குடியிருந்தவர்கள் அனைவரும்...

வெளியில் குழுவாய் திரண்டு கவலை தோய்ந்த முகங்களுடன் ஏதோ புலம்பிக் கொண்டிருந்தார்கள்.

''என்ன ஆயிற்று இவர்களுக்கு?''

வீட்டுக்குள் செல்லாமல் சற்று நிதானித்து பக்கத்து வீட்டுப் பாட்டியிடம் மெல்ல விசாரித்தாள்.

''பாவம்...! எல்லாருமா சேர்ந்து போஸ்ட் ஆபீஸ்லே மாசாமாசம் பணம் கட்டிட்டு வந்தாங்கல்ல? அந்த ஆர்.டி. பணத்தை ஏஜண்ட் மூலமா தானே கட்டினாங்க?

ஏஜண்ட் கருங்காலி ஒழுங்கா தபால் நிலையத்துல கட்டாம தன் வாயிலே போட்டு மொத்தமா ஏப்பம் விட்டுட்டான்.

உங்கம்மாவும் தான் ஏமாந்துட்டா... எல்லாருமா சேர்ந்து கையெழுத்து போட்டு போலீஸ்லே மனு எழுதிக் குடுத்திருக்காங்க...''

மேற்கொண்டு பாட்டி பேசியது எதுவுமே அவளது செவிகளில் விழவில்லை.

''இந்த மாசத்தோடு சீட்டு முடிஞ்சுடுது. வட்டியோட சேர்ந்து இரண்டே கால் லட்சம் வருது.

வந்ததும் பேசினது படி மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்கு ஒரு லட்சம் தந்துடணும்.

மீதிப் பணத்துக்கு மாப்பிள்ளைக்கு நகை செஞ்சு போட்டுடணும். இதுக்கெல்லாம் அந்தப் பணம் பத்துமோ என்னமோ...?

எப்படியோ பேங்குல இருக்கிற பணத்தையும் எடுத்துப் போட்டு கல்யாணச் செலவை சமாளிக்க வேண்டியது தான்.

...நல்ல காலமா கொஞ்சம் கொஞ்சமா போஸ்ட் ஆபீஸிலே பணம் ...ட்டு வச்சது எவ்வளவு நல்லதா போச்சு...?

...வாயைக் கட்டி வயித்தைக் கட்டி குருவி சேர்த்த மாதிரி கஷ்டப்பட்டு ...த்த காசு...! இதை நம்பி தானே சம்பந்தி கிட்டே தைரியமா வாக்கு ...த்திருக்கேன்...?'' என்று அம்மா அடிக்கடி பெருமிதமாய் சொல்லிக் ...ண்டிருந்தாள்.

...வெளியில் குழுமியிருந்த கூட்டத்தில்... ஒரு சில பெண்கள் துக்கம் ...ாயம் படுபாவி! இப்படி பணத்தைச் சுருட்டிக்கிட்டு போயிட்டானே... ...க வயிறு எரியுதே? என்று புலம்பி பெருங்குரலில் அழுதார்கள்.

...த்னா வெகு வேகமாய் வீட்டிற்குள் நுழைந்தான்.

...ையபல கட்டில்... தரையில் அலங்கோலமாய் அம்மா செண்பகம் ...ந்து கிடந்தாள்.

...க்கத்தில் சொம்பு விழுந்து உருண்டு கிடந்தது.

...ண்ணீர் சிறு ஓடையாய் ஓடி... அம்மாவின் புடவையை ...னைத்திருந்தது.

...ப்புற விழுந்து கிடந்த அம்மாவை... பதற்றத்துடன் வாரித் ...கினான்.

...அம்மா... உனக்கு என்னம்மா ஆச்சு?''

...வாயில் ஒரு பக்கம் நுரை தள்ளியிருந்தது. தனது புடவைத் ...ப்பால் மெல்லத் துடைத்து விட்டு... கலைந்து கிடந்த அவளது ...ந்தைக் கோதி விட்டு... முகத்தை ஊன்றிப் பார்த்தான்.

...னாவுக்கு திக்கென்றிருந்தது.

...ம்மாவின் அழகான முகம்... ஒரு பக்கம் கோணியபடி விகாரமாய் ...ருந்து.

...து பக்கத்து கையும் காலும் இழுத்தாற் போன்று வித்தியாசமாகப் ...ட... இவனுக்கு அழுகை வெடித்தது.

...ஐயோ! யாராச்சும் ஓடிவாங்களேன்... அம்மாவோட நெலமை ...லையே...''

...ல் கேட்டது தான் தாமதம்... அக்கம் பக்கத்திலிருந்து ஆட்கள் ...மெமுவென்று ஓடி வந்து விட்டனர்.

...பொண்ணுக்கு... அந்தப் பணத்தை நம்பி கல்யாணம் வேற பேசி





காய்கறியை விற்று..
இலாபம் பார்க்கலாம்;
கீரையை விற்று...
இலாபம் பார்க்கலாம்;
அரிசி, பருப்பை விற்று...
இலாபம் பார்க்கலாம்;
பழங்களை விற்று
இலாபம் பார்க்கலாம்...
இவைகளெல்லாம் விளையும்
நிலைங்களை மட்டுமே
விற்று இலாபம் பார்த்தால்
உணவுப் பயிர்கள்
விளைவதெப்படி?
உயிர்கள் மண்ணில்
வாழ்வதெப்படி?

- ஜி.வி.மனோ,
தூத்துக்குடி.

முடிச்சிருக்கா செண்பகம்...!

அந்த துக்கம் தான் மனுஷிக்கு இந்த மாதிரி ஆயிடுச்சு... பாவம்...!'' அவர்கள் பரிதாபப்பட்டனர்.

ஆட்டோவில் அம்மாவை ஏற்றிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தான் ரத்னா.

டாக்டர் இப்படியொரு குண்டைத் தூக்கிப் போடுவார் என்று அவன் கனவிலும் கருதவில்லை.

''உங்கம்மாவுக்கு பாரலிட்டிக் அட்டாக்...! அதீத அதிர்ச்சி அடைஞ்சதால... இப்படியாயிடுச்சு.

பி.பி.பேஷண்ட் வேற... கவனமா இருந்திருக்க வேணாமா?''

''டாக்டர்! எங்கம்மாவை குணப்படுத்த முடியாதா டாக்டர்?''

''தொடர்ந்து பிஸியோதெரபி செய்யணும். விடா முயற்சியோட மருந்து மாத்திரைகளைத் தவறாம எடுத்துக்கிட்டு... இதை ஃபாலோ பண்ணினா... கண்டிப்பா கொஞ்சம் கொஞ்சமா இவங்க மீண்டு வந்துடலாம்...

இதைப் போல... நிறைய பேரு போராடி முயற்சி செஞ்சு அடுத்தவங்களோட ஆதரவில்லாம... தானே சுயமா நடமாடிக்கிட்டும் இருக்காங்க...

முக்கியமா... இந்த விஷயத்துல பேஷண்ட் தான் மனசு வைக்கணும். கூட இருக்கிறவங்க அன்பா அனுசரணையா இருந்து...

அவங்களுக்கு இந்த நம்பிக்கையை ஊட்டி முயற்சி செய்ய வைக்கணும்...'' தன்னிச்சையாய் வழிந்த கண்ணீரை... புறங்கையால் துடைத்தபடி தலையை ஆட்டினாள் ரத்னா.

வீட்டிற்கு அழைத்து வந்து கட்டிலில் படுக்க வைத்து விட்டு... அம்மாவுக்கு ஓட்ஸ் கஞ்சியைக் காய்ச்சி... அவளை வற்புறுத்தி பருக வைத்தாள்.

அம்மாவின் முகத்தில் பீதியும் இனம் புரியாத திகிலும் பரவியிருந்தன.

''உன்னைப் போல தான்... நிறைய பேரு ஏஜெண்ட் மூலமா கட்டி ஏமாந்து போயிட்டாங்க...

ஒரு தடை... நாமளே மாசா மாசம் நேர்ல போயி போஸ்ட் ஆபீஸிலே கட்டிட்டு வந்திருக்கணும். சரி.. போய் தொலையட்டும் விடு! புகார் தந்திருக்காங்களாம்... போலீஸ் நடவடிக்கை எடுத்து அந்த ஏஜண்டை புடிச்சு அடிச்சு... எல்லாத்தையும் மீட்டுத் தந்துடுவாங்கன்னு... எல்லாரும் நம்பிட்டிருக்காங்க...

அப்படி நடந்தா சந்தோஷம் தான்... அந்த மாதிரி நடக்காம போனாலும்... கவலைப்படக் கூடாது. எதுக்கும் மனசைத் தயார் நிலையில் வச்சுக்கணும் அம்மா...!''

அம்மா செண்பகத்தின் முகத்தில் படர்ந்திருந்த பீதி... தாங்கொண்ணா துக்கம்...

'இவற்றைப் பார்த்தால்... இந்த விஷயத்துக்காக மட்டும் கவலைப் படுவதாகத் தெரியவில்லையே?

அம்மா வேறு எதற்கோ கலங்குகிறாள்.

வேறு எதையோ மனதில் வைத்துக் கொண்டு பரிதவிக்கிறாள்.

என்னிடம் சொல்லுவதற்கு உள்ளூர துடிக்கிறாள். அது என்னவாக இருக்கும்?

அவளது பார்வை எதிலேயோ... நிலைகுத்தி நிற்கிறதே? அது என்ன?

அம்மாவின் பார்வை பதிந்த இடத்திற்கு. தனது பார்வையாலேயே பயணித்தாள்.

பெரிய டிரங்க பெட்டி... அப்புறம் வேறு ஏதோ தட்டுமுட்டு சாமான்கள் அடங்கிய கோணிப்பை ஒன்றும் கால் உடைந்து போன பழைய நாற்காலி ஒன்றும் கிடந்தன.





கடற்கரை மணலில்
உன் காலடி கவ்வி
முத்தமிட்டு இனிப்பானது
கடல்!
– சங்கீத சரவணன், மயிலாடுதுறை.

அம்மா வலது கையை மெல்லத் தூக்கி... அந்தப் பரணை சுட்டிக் காட்டினாள்.

பேச முற்பட்டாள் போலும்.

இடது பக்கம் வாய் வெகுவாய் கோணிக் கொண்டதால்... முகம் அஷ்ட கோணலாய் விகாரமாய் ஆனது.

இரு புறமும் கண்ணீர் தாரை தாரையாய் வழிந்தது.

''ரத்னா... ரத்னா''

குரலும் குழறலாய் தான் வந்தது.

''என்னம்மா... நீ எதுவும் பேச வேணாம். ஆஸ்பத்திரிக்கு போயிட்டு வந்து... ஒரு மணி நேரம் கூட ஆகலை... உடம்பைப் போட்டு அலட்டிக்காதேம்மா...

அக்காவுக்கு ''போன் பண்ணி வரச் சொல்லவா?''

அம்மா அவசரமாய் தலையை மறுப்பாய் அசைத்தாள். அவளது பார்வை அந்த டிரங்க் பெட்டியின் மீதே நிலைத்திருந்தது.

அக்கா நளினா சுய நலத்தின் மொத்த வடிவமானவள். பிறந்தகத்திற்கு வரும் போதெல்லாம்... ஒரு மூச்சு தனது புகுந்த வீட்டினரையும் தனது பிரச்சினைகளைப் பற்றியுமே பேசித் தீர்த்துவிட்டு... அக்கடா என்று அமர்ந்திருப்பாள். பிறந்த வீட்டில் ஏதாவது ஆதாயம் கிடைக்குமா? என்று தான் ஆராய்ந்தாள்.

ஒரு துரும்மைக் கூட அந்தண்டை இந்தண்டை நகர்த்த மாட்டாள். சாப்பிட்ட வட்டிலைக் கூட எழுந்து போய் கழுவி வைக்க மாட்டாள்.

தன்னையும் தனது விதவைக் கோலத்தையும் பற்றி சதா சொல்லிச் சொல்லி கண்ணீர் வடிப்பதோடு... மற்றவர்களும் சேர்ந்து தனக்காக கண்ணீர் விட்டு தேம்ப வேண்டும் என்று எதிர்பார்ப்பாள்.

அவள் இங்கு வந்தால்... உபத்திரவம் தான்...!

உதவி எதுவும் செய்யாவிட்டாலும் உபத்திரவமாவது செய்யாமல் இருக்க வேண்டும்.

ஆனால் இந்த நளினாவால்... உபத்திரவம் செய்யாமல் இருக்கவே முடியாது.

கட்டிலின் கால்மாட்டில் அமர்ந்தபடி மிருதுவாக இதமாக அம்மாவின் கால்களைப் பிடித்து விட்டான்.

''சரிம்மா... அக்காவுக்கு நா ஃபோன் பண்ணலை. மனசைப் போட்டு அலட்டிக்காம நிம்மதியா தூங்கு. அதான் ரொம்ப முக்கியம்...''

சுடான பாலில் தூக்க மாத்திரையைப் போட்டு அதை அம்மாவுக்குப் பருகக் குடுத்தான்.

அம்மா செண்பகம் பாலை அருந்தி முடித்து விட்டு மீண்டும் பரணிலேயே பார்வையைப் பதித்துக் கொண்டாள்.

சற்று நேரத்தில் விழிகள் சொருக மெல்ல ஆழ்ந்த தூக்கத்தில் மூழ்கினாள். மெல்லிய போர்வையால் போர்த்தி விட்டான் ரத்னா.

போசனையுடன் அண்ணாந்து மேலே பார்த்த போது... அந்த டிரங்க் பெட்டியின் மீது பெரிய நாகப்பாம்பு படமெடுத்தபடி... இவனையே உக்கிரமாய் பார்த்துக் கொண்டிருந்தது.

'உஸ்ஸ்' என்று ஆங்காரமாய் சீறவும் செய்தது.

மனநிம்மதி,
ஆனந்தம், அன்பு,
தவம், தியாகம்,
அடக்கம் முதலிய
குணங்கள்
பணத்தால்
வருவதில்லை.
- விவேகானந்தர்.
- கே.விஜயலட்சுமி,
தி.மலை.

ரத்னாவுக்கு தூக்கி வாரிப் போட்டது. தன்னையும் அறியாமல் வீலென்று அலறிவிட்டான்.

2

ரத்னா அலறிய அலறலில்...வெருமனே சாற்றியிருந்த வெளிக் கதவைத் தள்ளித்திறந்து கொண்டு அக்கம் பக்கத்தினர் திமு திமு வென்று ஓடி வந்து விட்டனர்.



''ரத்னா... ரத்னா... என்னம்மா ஆச்சு?

உங்கம்மாவுக்கு மறுபடியும் ஏதாச்சும் பிரச்சினையா?''

ஆள் ஆளுக்கு அக்கறையாய் விசாரித்தனர். இவனது பார்வை திகிலுடன் அந்தப் பரணில் நோட்டமிட்டன.

அந்த நாகப் பாம்பு படமெடுத்திருந்த இடத்தில்... வெறும் பழைய சணல் கயிறு தான் பெரிதாக சுருட்டி வைக்கப்பட்டிருந்தது.

'என்னது இது? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி பாம்பை நான் கண்ணார பார்த்தேனே?

அழகாய் படமெடுத்து கோபமாய் சீறவும் செய்ததே?

அப்போது இந்த இடத்தில் சணல் கயிறு எதுவும் கண்ணுக்குத் தெரியவில்லையே?

பாம்பு மட்டும் தானே இருந்தது?

இப்போது பாம்பைக் காணவில்லை. சணல் கயிறு இருக்கிறதே? இது எப்படி சாத்தியம்?

அம்மாவுக்கு இப்படியொரு நிலைமையாகி விட்டதே? என்ற கவலையில் இருந்த எனக்கு... இலேசாய் புத்தி மாறாட்டம் ஏற்பட்டு விட்டதோ?

இல்லை... பிரமை பிடித்து விட்டது போலும்...!

இத்தனை வருடங்களாய் வாழ்ந்த வீட்டில்... ஒரு நாள் கூட பாம்பு யார் கண்ணிலும் தட்டுப் படவே இல்லையே?

அக்கம் பக்கத்திலும் பாம்புகளின் நடமாட்டம் இருப்பதாய் தெரியவில்லையே?

அப்படி இருக்கும் போது... வீட்டுப் பரணில் பழைய டிரங்க் பெட்டி அருகே மட்டும் பாம்பு எப்படி வர முடியும்?

இருக்காது... பாம்பு வந்திருக்க முடியாது. குழப்பத்தில், கவலையில் எனக்கு மனப் பிரமை ஏற்பட்டு விட்டது போலும்.

சணல் கயிறைப் பார்த்து விட்டு... பாம்பு என்று நினைத்து அலறி விட்டேன் போலிருக்கிறது...

தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டான்.

'பயத்தில் அலறி இப்படி கூட்டத்தைக் கூட்டி விட்டேனே?'

1663 இல் இத்தாலிய விஞ்ஞானியான பார்ட்டிலிட்டஸ் என்பவர் லாக்டோஸ் என்ற சர்க்கரை பாலிலிருப்பதை கண்டுபிடித்தார்.

- ஜீவஜ்யோதி,
கிருஷ்ணகிரி.



அவளுக்கு சங்கோஜமாகி விட்டது.

''என்னம்மா? என்னாச்சு?'' என்று பதற்றமாய் கேள்வி கேட்டவர்களை... தர்ம சங்கடமாய் ஏறிட்டாள் ரத்னா.

''ஒ... ஒண்ணுமில்லை. ஒரு எலி எதிர்பாராம கால் கிட்டே தவ்வி விழுந்து ஓடிச்சு... பயத்துல என்னையும் அறியாம அலறிட்டேன். சிரமத்துக்கு மன்னிக்கணும்...''

''அட... பரவாயில்லைம்மா... நாங்க கூட உங்கம்மாவுக்கு தான் என்னமோ? ஏதோ?ன்னு பதறி ஓடியாந்தோம்.

ஆங்... ரத்னா! நாங்க எல்லாரும் மனு எழுதிக் குடுத்திருக்கோம். நீயும் எழுதிக் குடு... அந்த மனுவை நான் கொண்டு போய் இன்ஸ்பெக்டரு கிட்டே குடுத்துடறேன். தாமதிக்காம எழுதித் தர்றியா?

பாவம்... அம்மா இந்த நிலைமையில இருக்கும் போது நீ ஸ்டேஷனுக்கெல்லாம் அலைய வேணாம்...

ராத்திரி உதவி ஏதாச்சும் தேவைப்பட்டா... தயங்காம ஒரு குரல் குடு... நாங்க ஓடியாந்துடறோம்...

மாத்திரை மருந்து ஏதுவும் வாங்கணும்னாலும் சொல்லு...!''

எதிர் வீட்டில் குடியிருந்த ஆட்டோக்கார அண்ணாச்சி பேசியதைக் கேட்டதும்... இவளுக்கு தெம்பாய் ஆறுதலாய் தான் இருந்தது.

''ரொம்ப நன்றி! நான் உடனே மனுவை எழுதித் தந்துடறேன்''

''ஏம்மா ரத்னா! உங்க அக்காளுக்கு 'போன் போட்டு விஷயத்தைச் சொல்லிட்டியா?

''ம்... சொல்லப்போறேன்''

''ஆ... மா! மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்கு தகவல் சொல்லிட்டியா?...''

''இல்லை... கவலையில டென்ஷன்லெ சொல்லலை. நாளைக்கு... காலையில நிதானமா சொல்லிக்கலாம்னு இருக்கேன். இப்போ நைட் ஆயிடுச்சே?''

தயக்கமாய் பதில் சொன்னாள்.

''ஆமாமா... விஷயத்தைக் கேள்விப்பட்டா உடனடியா புறப்பட்டு வருவாங்க... ராத்திரி நேரத்துல என்னத்துக்கு வீணா அவங்க அலையணும்?

காலையிலேயே சொல்லிக்கோ... இனி... அவங்க வந்து பார்த்து... நிலவரம் என்னன்னு தெரிஞ்சுக்கிட்டாங்கன்னா... என்னத்தை சொல்லப் போறாங்களோ?

ஆர்.டி பணத்தை நம்பி தானே... உங்கம்மா வாக்கு குடுத்தா...? ஹூம்...! என்ன நடக்கப்போகுதோ?''

கனகம்மா முணு முணுத்தபடியே வெளியேறினாள்.

''நிச்சயதார்த்தம் முடிஞ்சிருக்கு. இன்னும் முப்பது நாள்லே கல்யாணம். இந்த சமயம் பார்த்தா... அந்தப் படுபாவிபயல் பணத்தைச் சுருட்டணும்?

அந்த அதிர்ச்சியில... இந்தம்மாவுக்கு பக்கவாதம் வந்து படுக்கையில சாய்ஞ்சுட்டாங்க... தகப்பனில்லாத குடும்பம்... ரத்னா பொண்ணைப் பார்க்கவே... ரொம்ப பாவமா இருக்கு...''

புலம்பியபடி சென்றார் ஆட்டோக்கார அண்ணாச்சி.

ரத்னாவுக்கு திக்கென்றிருந்தது.

அவளுக்கும் நாதனுக்கும் சென்ற மாதம் தான் நிச்சயதார்த்தம் நடந்தேறியது.

தரகர் மூலமாக வந்த வரன் அது!

''ரத்னா! இது நல்ல வரன் மாதிரி தோணுதும்மா... மாப்பிள்ளை படிச்சவராம்... அண்ணா நகர்லே சொந்தமா வீடு இருக்காம்.

ஒரே புள்ளதான். பொண்ணைக் கட்டிக் குடுத்துட்டாங்க... சொந்தமா பிஸினஸ் பண்ணிட்டிருக்காராம். நல்ல வருமானமாம்.

பஜாருலே ரெண்டு கடைங்களை வாடகைக்கு விட்டிருக்காங்களாம்... ரொம்பப் பெரிசா ஒண்ணும் எதிர்பார்க்கலை. பொண்ணு கண்ணுக்கு லட்சணமா இருக்கணும். படிச்சிருக்கணும்.



வாய்ப்புண் உள்ளவர்கள் வெங்காயத்தை விளக்கெண்ணெயில் வதக்கி உணவுக்கு முன் சாப்பிட்டால் குணமடையலாம்.

ஆர்.பிரகாசம், திருமலை.

பெரியவங்களை மதிச்சு அனுசரிச்சு குடும்ப நடத்தற பொண்ணா குணவதியா இருக்கணும்னு எதிர்பார்க்கிறாங்க. கையில ஒரு லட்சம் ரொக்கம் குடுத்து பொண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் எளிமையா ஒரு வரிசை நகை போட்டு அனுப்பினா போதும்கிறாங்க... உன்னோட ஃபோட்டோவைப் பார்த்துட்டு... அவங்களுக்கு ரொம்பவும் பிடிச்சு போச்சாம்...

நீ என்னம்மா சொல்றே?

''உங்களுக்கு பிடிச்சா எனக்கு சந்தோஷம் தாம்மா!...'' என்றாள்.

அம்மா செண்பகத்திற்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

மளமளவென்று நிச்சயதார்த்தம் எளிமையாக நடைபெற்று முடிந்தது.

அதற்கு மறுநாளிலிருந்தே... நாதன் ரத்னாவுக்கு உரிமையாய் ஃபோன் செய்ய ஆரம்பித்தான்.

''என்னம்மா இது? அவரு ஸ்கூல் டைம்லே ஃபோன் பண்றாரு. நிம்மதியா கிளாஸ் எடுக்க முடியலை. கொஞ்சம் கூட இங்கிதமே இல்லாம கால்மணி நேரத்துக்கு ஒரு வாட்டி ஃபோன் பண்ணி கழுத்தை அறுக்கிறாரு...

இதெல்லாம் எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கலைம்மா... நீ என்னத்துக்கு என்னோட ஃபோன் நம்பரை அவருக்கு குடுத்தே...?''

அழ மாட்டாத குறையாக அம்மாவிடம் வந்து புலம்பினாள்



ரத்னா.

''ரத்னா கண்ணு! கோபப் படாதேம்மா... அவரு யாரு? வேத்து மனுஷனா? உன்னைக் கட்டிக்கப் போறவர் தானே? மாப்பிள்ளை கிட்ட கோபமா எடுத்தெறிஞ்சு பேசிடாதேம்மா...

நிச்சயம் முடிஞ்சதும் அவரு தான் ஃபோன் நம்பரைக் கேட்டாரு... பேப்பர்லே குறிச்சுத் தந்தேன். நிச்சயம் முடிஞ்சு போச்சே? பாதிக் கல்யாணம் ஆன மாதிரி தானே?

மாப்பிள்ளை கேட்கும் போது என்னால மறுத்துப் பேசவும் முடியலைம்மா... எனக்காக... கொஞ்ச நாளைக்கு பொறுத்துப் போம்மா...''

அம்மா செண்பகம் இவளது தாடையைத் தொட்டுத் தடவிக் கெஞ்சினாள்.

அம்மா மீது அதீத பாசம் கொண்டவள் ரத்னா. மாடி வீட்டை வாடகைக்கு விட்டு அதிலிருந்து வந்த பணத்தில் கட்டும் செட்டுமாக குடும்பத்தை நடத்தியவள் அம்மா.

அக்கம் பக்கத்தினருக்கு துணிகள் தைத்துக் கொடுத்து... சதா குடும்பத்திற்காக ஓடாய் தேய்ந்தவள்.

அம்மாவின் மனம் நோகும்படி என்றுமே அவள் நடந்ததில்லை.

''சரிம்மா... உனக்காக இந்தத் தொல்லையை நான் சகிச்சுக்கிறேன்...'' என்றாள் ரத்னா.

ஆனால்... நாதனோ நாளாக நாளாக அளவு கடந்து தொல்லை செய்ததோடு... எல்லையை மீறவும் ஆரம்பித்தான்.

நொந்து போனாள் ரத்னா.

## 3

தினமும் பலமுறை ஃபோன் செய்து தொந்தரவு செய்தான் நாதன்.

நான்கைந்து நாட்கள் பொறுத்துப் பார்த்தவள்... செல் ஃபோனை

ஸ்விட்ச் ஆஃப் செய்து வைத்தான்.

மாலை நேரத்தில் வீட்டிற்கு வந்ததும் தான் ஃபோனை ஆன் செய்தான்.

அன்றிலிருந்து... அந்தி சாயும் நேரத்தில் ஃபோன் செய்து கொஞ்சிப் பேசலானான்.

அடிக்கடி அவளைப் பார்ப்பதற்காக உரிமையுடன் வீட்டிற்கே வரத் தொடங்கினான்.

நறுக்கு தெறித்தாற் போல் பேசி விட்டு...

''சாரி! எனக்கு நிறைய வேலை இருக்கு. பேப்பர்களைத் திருத்தணும். தபால் மூலமா மேற்கொண்டு படிச்சுட்டிருக்கேன். எக்ஸாம் நெருங்குது... நிறைய படிக்க வேண்டி இருக்கு...'' என்று ஏதாவது காரணத்தைச் சொல்லி விட்டு உள்ளே நகர்ந்து விடுவாள்.

வருங்கால கணவன் என்ற உரிமையில், துணிவில் அவனுக்கு துளிர் விட்டுப் போனது.

நாளடைவில் ''ரத்னா! மை டியர்!... ஸ்வீட்டி!

டார்லிங்!... சதா உன் ஞாபகமாவே இருக்குடா... இப்போ நான் ஃபோன்ல முத்தம் தரப் போறேன்.

அத்தானுக்கு நீயும்... பதிலுக்கு இஷ்ப்பா ஒன்னு குடேன்... ப்ளீஸ்...'' என்று உருக ஆரம்பித்தான்.

''எ... எனக்கு சுத்தமா பிடிக்கலை'' வெடுக்கென்று கூறினாள் ரத்னா.

''எது பிடிக்கலை?ன்னு விளக்கமா சொல்லுடா செல்லம்!''

''நீங்க இந்த மாதிரி பேசறது எனக்குப் பிடிக்கவே இல்லை...''

''பேசறது பிடிக்கலையா? இல்ல... என்னையே பிடிக்கலையா?''

''நீங்க எப்படி வேணும்னாலும் எடுத்துக்கோங்க... கட்டுப்பாடா வளர்க்கப்பட்டவள் நான்... கல்யாணத்துக்கு முன்னாடி இப்படி நீங்க என்கிட்ட பேசறதை... என்னால ஜீரணிச்சுக்க முடியலை...''

படக்கென்று கூறி போனை வைத்து விட்டாள் ரத்னா.

மறுநாள் அவள் ஸ்கூலுக்குச் செல்லும் போது... அந்த தெரு முனையில் அவளை மடக்கினான் நாதன்.

''கட்டிக்கப் போறவனாச்சே?ன்னு கொஞ்சமாச்சும் உனக்கு நெனப்பு



இருக்கா? மட்டு மரியாதை இல்லாம ஃபோனை கட் பண்ணிட்டே?

என்ன தைரியம் உனக்கு? ரொம்ப அழகா இருந்துட்டாலே இப்படித்தான்... திமிரு ஜாஸ்தியா ஆயிடுது. தோ... பாரு! இதுவே கடைசி முறையா இருக்கட்டும்.

எனக்கு கோபம் வரும் படியா நீ நடந்துக்கிட்டே... அப்புறம் விளைவுகள் பயங்கரமா இருக்கும். நான் ஆம்பிளை ஒரு கோபத்துல ஏடாகூடமா முடிவெடுத்துட்டா... அப்புறம் நஷ்டம் உனக்கு தான்... ஞாபகமிருக்கட்டும்''

அடிக்குரலில் உறுமி விட்டு விருட்டென்று பைக்கில் கிளம்பி விட்டிருந்தான்.

மறைமுகமாக 'கல்யாணத்தையே நிறுத்தி விடுவேனாக்கும்' என்று அவன் எச்சரித்து விட்டுப் போனதை... அவள் அம்மாவிடம் சொல்லவே இல்லை.

வலிய ஃபோன் செய்து தன்னிடம் அவள் மன்னிப்பு கேட்பாள் என்று நாதன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

நான்கே நாட்களில்... அம்மாவுக்கு பக்கவாதம் வந்து படுக்கையில் விழுவாள் என்று ரத்னாவும் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

இப்போது இந்தத் தகவலை, நாதனுக்கோ அல்லது அவனது குடும்பத்தாருக்கோ எப்படி சொல்வது? என்று தயக்கமாக இருந்தது.

இரவெல்லாம் அவளுக்கு கவலையில் தூக்கமே பிடிக்கவில்லை.

காலையில் அம்மாவுக்கு செய்ய



என் ஆயுளை
அதிகரிக்கும் வித்தை
உன் ஒத்த புன்னகையில்...
களவுகள் வலித்தது
-சங்கீத சரவணன்,
மயிலாடுதுறை.

வேண்டிய பணிவிடைகளை முடித்து விட்டு... நாதனுக்கு ஃபோன்
செய்தான்.

''என்ன ரத்னா? அஞ்சு நாள் பொறுத்து தான் அத்தான் கிட்டே
மன்னிப்பு கேட்கணும்னு உனக்கு தோணிச்சா? இனிமேல் என் மகை
கோணாம நீ நடந்துப்பேயில்ல...?''

''பச்! நா அதுக்கு ஃபோன் பண்ணலை...'' என்றவள் சுருக்கமாக
விஷயத்தைக் கூறி விட்டாள்.

மறுமுனையில் ஸ்தம்பித்துப் போய் ''சரி! நாங்க நேர்லே வர்றோம்''
என்று கூறி விட்டு பட்டென்று ஃபோனை வைத்து விட்டான்.

கடுகடுத்த முகங்களோடு கால் டாக்ஸியில் வந்து இறங்கினார்கள்.

நாதனின் அம்மாவும் அப்பாவும் அலட்சியமாய் செண்பகத்தை
நோட்டமிட்டார்கள்.

''உங்கம்மாவுக்கு 'நடிகையர் திலகம்'னு பட்டமே குடுக்கலாம்
ரத்னா'' என்ற நாதனின் அம்மாவை... திகைப்புடன் ஏறிட்டாள்.

''எ... என்ன சொல்றீங்க?''

''ஆர்.டி.பணத்தை மோசடி பண்ணிட்டாங்க... அந்த அதிர்ச்சியில
பக்கவாதம் வந்துடிச்சுன்னு சொல்றதை... என்னால நம்ப முடியலை...

''இந்தக் கல்யாணம் நடக்காது. நிச்சயதார்த்தம் முடிஞ்சிருக்குதான்...
ஆனா... கல்யாணம் நின்னு போச்சு...

இதை... நாங்களும் எங்க உறவுத் தலைகளுக்கு தகவல்
அனுப்பிடறோம். நீயும் உங்க சொந்த பந்துங்களுக்கு சொல்லிடு.

மேலே வீசிப் போட்டா... ஆயிரம் காக்கா... எம்புள்ளைக்கு
பொண்ணு குடுக்க... கியூவிலே காத்துக் கிடக்காங்க... நாதா!

தரித்திரத்தை தலையில கட்டிக்கிட்டு அழணும்னு... உனக்கு
ஒண்ணும் விதியில்ல... வாப்பா... கிளம்பலாம்...''

அம்மா உத்தரவிட்டதும் மறுபேச்சு பேசாமல்... இவளை ஏறிட்டுக்
கூடப் பாராமல்... வெளியேறி விட்டான் நாதன்.

நாதனின் அம்மா சவு இரக்கமில்லாமல் கூச்சலிட்டதும்...
செண்பகம் தேம்பி அழத் தொடங்கினாள்.

''அ... அம்மா! அழாதேம்மா... கொஞ்சம் கூட மனுஷத் தன்மையே
இல்லாத ஜென்மங்கள்... போகட்டும் விடு!



பிணந்தின்னி கழுகுங்க... இவங்களுக்கு பணம் தான் குறி!

இந்த நாதன் ஒரு தரங்கெட்டவன். ஒரு பொண்ணு கிட்டே
எப்படி பேசணும்னு தெரியாத பொறுக்கி... இவனைப் பெத்தவங்க
இப்படித்தானே இருப்பாங்க?

உணர்ச்சி வசப்பட்டு பேசினாள் ரத்னா.

இரு விழியோரமும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோட...
மகளையே இமை கொட்டாமல் பார்த்தபடி விசும்பினாள் செண்பகம்.

பின்பு மெதுவாக தனது பார்வையை அந்தப் பரணின் மீது பதித்தாள்.

அதிர்ச்சியில் அவளது விழிகள் நிலைகுத்தி
நின்றன.



இஞ்சியை
அதிகமாக
உணவில் சேர்த்துக்
கொண்டவர்களைப்
'பிளேக்' நோய்
தாக்குவதில்லை
என்று இங்கிலாந்தில்
கண்டறிந்துள்ளனர்.
- கே.கவிதா,
குரும்பாளையம்.

## ←←←4→→→

ரத்னாவின் புருவங்கள் யோசனையுடன்
நெரிந்தன.

அவள் மெதுவாகத் திரும்பி... அந்தப் பரண்
மீது பார்வையை வீசினாள்.

பழைய டிரங்க் பெட்டியருகே... ஜடாமுடியுடன்
அடர்ந்த தாடி மீசையுடன் நெற்றியில் விபூதிப்
பட்டையுடன் ஒரு முகம்...!

விழிகள் இரண்டும் தீர்க்கமாய் ஜொலித்தன.

கழுத்து வரை அந்த முகம் இருந்தது.
கழுத்துக்கு கீழே... உருவம் தெரியவில்லை.

அதற்கு பதிலாக 'நெளுக்... நெளுக்' என்று
பாம்பின் உடல் பளபளவென்று நெளிந்து
கொண்டிருந்தது.

ரத்னாவுக்கு பகீர் என்றிருந்தது.

'என்னது இது? நேற்றைக்கு இதே இடத்தில் ஒரு பாம்பு படமெடுத்த
படி... என்னைப் பார்த்து 'உஸ்ஸ்...' என்று சீறவும் செய்ததே...?

இப்போது அதே இடத்தில் ஒரு முனிவரின் முகம் மட்டும் தெரிகிறது... மனித உடலுக்கு பதிலாக பாம்பின் உடல் தெரிகிறதே?

பார்வையில் பளிச்சென்று பட வேண்டும் என்பதற்காக... வேண்டுமென்றே பாம்பின் வால் பகுதி வேகமாய் அசைகிறதே?

பரணில்... இப்படியொரு அரிய பயங்கர காட்சியைக் கண்டதும்... நாடி நரம்புகள் எல்லாம் தந்தி அடிக்கின்றனவே?

கைவிரல்கள் சட்டென்று சில்லிட்டுப் போய் விட்டன.

இப்படியொரு காட்சியைக் கண்டால்... யாராக இருந்தாலும் பயத்தில் அலறி விடுவார்கள் என்பது நிச்சயம் தான்.

அம்மாவுக்கும் இந்தக் காட்சி தெரிகிறது போலும்...

அவள் தானே முதலில் அதிர்ந்து பீதியுடன் நிலை குத்திப் பார்த்துக் கொண்டிருந்தாள்...?

ஆமாம்... அவள் இதைப் பார்த்ததால் தான் பார்வை உறைந்து போயிருந்தது...!

கண நேரத்தில் பல எண்ண அலைகள் எழும்பி... அவளது இதயச் சுவரை வேகமாய் மோதி அடங்கின.

ரத்னா பார்வையைத் தழைத்து... அம்மாவைத் திரும்பிப் பார்த்தாள்.

விழிகள் விரிய பீதியுடன் இவளை ஒரு பார்வை பார்த்தாள் செண்பகம்.

அதில் ஓராயிரம் அர்த்தங்கள்...

ஏதோவொரு முக்கியமான ரகசியத்தை சமாச்சாரத்தை அவள் அறிந்து கொண்டிருக்கிறாள் என்பது போன்ற முகபாவனை...!

அந்த ரகசியத்தை ரத்னாவிடம் சொல்லி விட வேண்டும் என்று உள்ளூர அவள் துடியாய் துடிப்பதை... ரத்னாவால் உணர முடிந்தது.

கணவன்: இன்னிக்கு என்ன
காரக்குழம்பா?
பருப்புக் குழம்பா?
மனைவி: ஏதோ உங்களுக்குப்
பிடிச்சதை செஞ்சி வையுங்க!
–ஆர்.பிரகாசம், தி.மலை.





ரத்னாவுக்கு... இப்போது அந்தப் படபடப்பு சற்றே மட்டுப் பட்டிருந்தாற் போலிருந்தது.

துணிவைத் திரட்டிக் கொண்டு... மீண்டும் பரண் மீது ஏறிட்டாள்.

அந்த முனிவரின் முகம்... சாத்வீகமாய் இருந்தது. முகத்தில் அப்படியொரு தேஜஸ்...!

அது மட்டுமா...?

அந்த தெய்வீக முகத்தில் சாந்தம் தவழ்ந்து கொண்டிருந்தது. விழிகளில் கனிவு தேங்கி நின்றது.

இதழ்க்கடையில் இலேசான குறுநகை வந்து அமர்ந்திருந்தது.

இருந்தாலும்... ரத்னாவுக்கு முற்றிலும் அந்த பயம் போகவில்லை.

திகிலில் அவளது நா மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டு விட்டாற் போன்ற பிரமை...!

''பவுர்ணமி அன்று... கொல்லி மலைக்கு வா! நள்ளிரவுலே மலையோட மையப் பகுதிக்கு வந்து சேரு...

முன்னோர்கள் செய்த பாவத்துக்கு பிராயச்சித்தம் தேடு... உன்னால் ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கு.

காணக்கிடைக்காத பொக்கிஷத்தை சேர்க்க வேண்டிய இடத்துல சேர்த்துடு... சுனையில அரிதாகப் பூக்கிற சர்ப்ப காந்தியைப் பறித்து... அதைப் பத்திரமா கொண்டு வந்து உன் தாயாரோட சிரசு மேல வை...

சர்ப்ப காந்தி தீராத வியாதிகளைத் தீர்த்து வைக்கும்...

முனிவரின் இதழ்கள் சிறிதும் அசையவில்லை.

ஆனால்... அசரீரி போல் அந்தக் குரல் மட்டும் கணீரென்று கேட்டது. சில்லென்று அவளுக்கு புல்லரித்தது.

''சரிங்க ஸ்வாமி'' அந்த தெய்வீக உத்தரவுக்கு தன்னையும் அறியாமல் பணிவாய் பதிலளித்தாள்.

மறுகணம்... அவள் கண்ணிமைத்து விட்டு நோக்கும்போது... அங்கே அந்தக் காட்சி மறைந்து விட்டிருந்தது.

பழைய டிரங்க் பெட்டியும் தட்டு முட்டு சாமான்களும் தான்... தென்பட்டனவே தவிர... இப்படியொரு காட்சி தோன்றி மறைந்ததற்கான சுவடே தெரியவில்லை.

''அம்மா! அந்த முனிவர் பேசினதைக் கேட்டேயில்லை?'' பரபரப்பாக அம்மாவின் கால் மாட்டில் அமர்ந்தபடி கேட்டாள்.

''இம்ஹூ...'' அம்மா மறுப்பாய் தலையை அசைத்தாள்.

''என்னம்மா சொல்றே? இப்போ தானேம்மா... கணீர்னு ஒரு அசரீரி மாதிரி குரல் கேட்டது? உனக்கு அந்தக் குரல் கேட்கவே இல்லையா?''

''இம்ஹூவே இம்ஹூ...'' குழறலாய் பதிலளித்தாள் செண்பகம்.

''அப்போ எனக்கு மட்டும் தான் கேட்டுச்சா? சரி... பரண்லே தெரிஞ்ச காட்சியைப் பார்த்தியா...?''

''உம்... பாத்தேன்...''

''அந்த உத்தரவுப் படி பவுர்ணமி அன்னிக்கு... கொல்லிமலைக்கு நான் கிளம்பறேன்...

''வேணாம்... ஆ...பத்து வரும். கன்னிப் பெண் நீ அதிலும் அழகானவ... போ வேணாம்...

''அம்மா! உன்னோட வியாதி தீரணும். நீ குணமாகி நல்லா நடமாடணும். அதுக்காக நான் போய் திருவேன். அந்த சர்ப்ப காந்தியைப் பறிச்சுட்டு வந்து உன் தலையில வைக்கச் சொன்னாரும்மா...

அது அரிதாக பூக்குமாம். சுனையில பூக்குமாம். முன்னோர்கள் செஞ்ச பாவத்துக்கு பிராயச்சித்தம் தேடச் சொன்னாரு... என்னால ஒரு காரியம் ஆக வேண்டியிருக்காம்...

அது என்ன பாவம்? யார் பாவம் செய்தாங்க? நம் முன்னோர்கன்னா... அந்த முனிவரு யாரைக் குறிப்பிடுறாரு? எனக்கு ஒண்ணுமே புரியலையேம்மா?...

உனக்கு இதைப் பத்தி ஏதாச்சும் தெரியுமா? ஆமா... எதையோ என் கிட்ட சொல்லத் துடிக்கிறே... அது என்னம்மா...?

என் கிட்டே எதையும் மறைக்காம... வெளிப்படையா சொல்லும்மா... ப்ளீஸ்...''

அம்மா செண்பகம் தயங்கினாள்.

''உனக்குத் தெரிஞ்சதை என் கிட்ட நீ சொல்லி தான் தீரணும்...''

''என்னால சரியா பேச முடியாது... நான் அதோ. அந்த நோட்டுல எழுதியிருக்கேன்... படிச்சுப்பாரு...''

சிரமப்பட்டு தான் பேசினாள்.



**பணம் நமது தேவையைப் பூர்த்தி செய்வதாக நினைப்பது தவறு. அது நம் தேவைகளைப் பெருக்கவே செய்கிறது. - பின்லாந்து**

*- காசிதாசன், வந்தவாசி.*

சாமி மாடத்துக்கு அருகே இருந்த அலமாரியில் தான் அந்த நோட்டு இருந்தது.

அம்மா அடிக்கடி இந்த நோட்டை எடுத்து வைத்துக் கொண்டு ஸ்ரீராம ஜெயம்' எழுதுவது வழக்கம்...!

யோசனையுடன் அந்த நோட்டை எடுத்துப் பிரித்தாள் ரத்னா...

முக்கால் வாசி நோட்டு தீர்ந்து போயிருந்தது.

நெருக்கமாக குட்டி எழுத்துக்களில் ஸ்ரீராம ஜெயம் எழுதி வைத்திருந்தாள் அம்மா.

வேகமாய் பக்கத்தைப் புரட்டினாள்.

'இன்று காஞ்சிபுரத்திற்குச் சென்றிருந்தேன்...' என்று ஆரம்பித்திருந்தாள் அம்மா.

'காஞ்சிபுரத்திற்கு எதற்கு அம்மா சென்றாளாம்? ஓ... இப்போது ஞாபகம் வருகிறது. எனது 'நிச்சயத்திற்கு' பட்டுப்புடவை எடுப்பதற்காக போய் வந்தாள்...'

தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள் ரத்னா.

அவளது பார்வை மீண்டும் அம்மாவின் எழுத்தை வருடின.

'காஞ்சிபுரத்திலிருந்து வரும் வழியில், படப்ப என்ற சிற்றூரில் இறங்கினேன். ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் இருந்த அரச மரத்தடியில் ஒரு சாமியார் வந்திருப்பதாகவும் அவர் சோழி போட்டு பார்த்தும்... முகத்தை ஊன்றிப் பார்த்தும்... ஆருடம் சொல்வதாகக் கேள்விப்பட்டேன்.

வெகு தூரம் நடந்து சென்று அந்த அரசமரத்தருகே இருந்த சாமியாரின் முன் பவ்யமாகப் பணிந்து நின்றேன்.

அதிர்ஷ்டம் இருந்தால் தான் அவர் ஆருடம் சொல்வார் என்றும்... அவர் கூறுவது 'அருள் வாக்கு' போல் அப்படியே பலிக்கும் என்று பலர் கூறியிருந்தனர்.

நான் பணிந்து எழுந்ததும் என் முகத்தை ஊன்றிப் பார்த்தார். சில

கணங்கள் கண்களை மூடிக்கொண்டார்.

தன் கையிலிருந்த சோழிகளை கட்டாந்தரையில் போட்டு... அவற்றை உற்று கவனித்தார்.

விழிகளை இறுக மூடி... நெற்றிப் பொட்டில் ஆட்காட்டி விரலை அழுத்திக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தார்.

அவர் மீண்டும் கண்களைத் திறந்த போது... அவை கோபத்தில் செக்கச் செவேலென்று சிவந்து போயிருந்தன.

சன்னதம் வந்ததைப் போன்று... அவரது மேனி ஒரு வெட்டு வெட்டியது.

ஆக்ரோஷமாக என்னை உருத்துப் பார்த்து விட்டு... நாடி நரம்பு வெடிக்க பெருங்குரலில் கத்தினார்.

''விநாச காலே விபரீத புத்தி'. பாவம் தொடருது. பாவம் வாங்கிட்டு தானிருக்கு. இன்னும் பழி தீர்க்கும்... செய்த பாவம் வம்சத்தை சும்மா விடாது.

நான் நடுங்கிப் போய் விட்டேன். அந்த சாமியார் என்ன சொல்கிறார்? பாவமா? பழியா?

வம்சத்தைப் பழி வாங்குமா? ஒன்றுமே புரியாமல் விழித்தேன்.

திகிலில் ஆடிப் போய் விட்டேன்.

இதை வாசித்ததும் ரத்னாவுக்கே படபடவென்று அடித்துக் கொண்டது.

என்னது இது? இவ்வளவு நடந்திருக்கிறதா? அம்மா என்னிடம் இதைப் பற்றி மூச்சே விடவில்லையே?

ஆனால்... காஞ்சிபுரத்திற்கு போய் விட்டு வந்ததிலிருந்து... அம்மா வழக்கத்திற்கு மாறாகத் தானே நடந்து கொண்டாள்?

சதா முகத்தில் ஒரு சோகம்...!

விட்டால் கோவென்று அழுது விடுபவள் போன்ற முகபாவனையுடன் தானே வலம் வந்தாள்...

சின்ன மகளைத் திருமணம் செய்து புகுந்த வீட்டிற்கு அனுப்பி விட்டால்... தனிமையில் இருக்க நேரிடுமே? என்ற கவலை... அம்மாவை வாட்டுகிறது என்றல்லவா நினைத்து விட்டேன்...?

அம்மாவும் என்னிடம் அப்படித்தானே சொல்லி மழுப்பினாள்?



பெருமூச்சு விட்டபடி... அம்மாவைத் திரும்பிப் பார்த்தாள்.

''ஏனம்மா... இதைப் பத்தி என் கிட்டே சொல்லவே இல்ல? என் கிட்டே இதுவரைக்கும் எதையும் நீ மறைச்சதில்லையே?'' என்று ரத்னா கேட்ட போது... செண்பகம் பரிதாபமாய் பார்த்தாள்.

ரத்னா... மேற்கொண்டு வாசிக்க ஆரம்பித்தாள்.

மிகப் பெரிய அதிர்ச்சி... அவளுக்காக காத்துக் கொண்டிருந்தது.

## 5

அந்த சாமியார் எதற்காக ஆக்ரோஷமாய் அம்மாவிடம் அப்படி கூறினார்?

என்ன காரணம் அதற்கு இருக்க முடியும்?

பதை பதைப்புடன் அவள் வாசித்த போது...

''சாமி! எனக்கு ஒண்ணுமே புரியலையே?

காரணம் என்னன்னு விளங்கும்படியா... சொல்லுங்க சாமி! கையெடுத்துக் கும்பிட்டுக்கிறேன்.

உலகத்தில்
தோல்வி பெறாமல்,
ஏமாற்றம் அடையாமல்
ஜெயித்தவர்களே
கிடையாது.
இ.ஹெப்பார்டு

ஏதாச்சும் பரிகாரம் செய்யணுமா?'' செண்பகம் கேட்டதும் சாமியார் கோபமாய் கடகடவென்று நகைத்தார்.

''உன்னோட வம்சத்துல... அத்தனை பொண்ணுங்களுமே பூவையும் பொட்டையும் இழந்திருப்பாங்களே? சுமங்கலியா கண்ணை மூடற பாக்கியம் இருந்திக்கும் கிடைச்சிருக்காதே?''

''ஆ... மா சாமி! மூணு தலைமுறையா எனக்குத் தெரிஞ்சு... யாருக்கும் சுமங்கலியா சாகற பாக்கியம் கிட்டலை...

என் மூத்த மக கூட போன வருஷம்... புருஷனை இழந்துட்டா...

எனக்கு தான் இந்தக் கோலம்னா... என் மகளுக்கும் இதே கோலமா? அதைத் தான் என்னால சகிக்க முடியல...

ஆமா சாமி! இதுக்கெல்லாம் என்ன காரணம்? யாரு செஞ்ச பாவத்தால... இப்படியெல்லாம் நடக்குது? இது மேலும் தொடராம

இருக்கணுமே சாமி!

நீங்க தான் இதுக்கு நல்ல வழி காட்டணும்...''

கோவென்று கதறியபடி தரையில் மண்டியிட்டு அவரது நிழலைத் தொட்டு வணங்கினாள்.

''செஞ்ச பாவத்துக்கு... கிடைச்ச சாபம் இது. வயிறெரிஞ்சு விட்ட சாபம் இது...!''

''யார் இட்ட சாபம்? யாரு பாவம் செய்தாங்க?''

''அதை நீ தெரிஞ்சுக்கத் தான் போறே...? நீ நல்லவ... உன் சின்ன மகளை நாக சதுர்த்தி அன்னிக்கு பெத்தெடுத்தே பாரு... அது தான் நீ செய்த அதிர்ஷ்டம்...''

''பரிகாரம் ஏதாச்சும் இருக்கா சாமி?''

''பரண்லே இருக்கு''

''அப்படின்னா...?''

''எல்லாத்துக்கும் பதில் பரண்லே கிடைக்கும்... கூடிய விரைவில மிகப் பெரிய இழப்பு உன்னைத் தேடி வரும்.

அந்த இழப்பால... உன்னோட ஆரோக்கியத்துக்கு கேடு வந்து சேரும்...

அந்த சமயத்துல... கட்டாயமா உனக்கு ஒரு அரிய காட்சி கிடைக்கும்...

பாதி புரிஞ்சும் புரியாம இருக்கிற விஷயத்துக்கு... விளக்கம் தேடி... உன் சின்ன மக... என்னைத் தேடி வருவா... வரணும்...''



உலகிலேயே இந்தியாவில்தான் கல்வெட்டுகள் அதிகம். அதிலும், குறிப்பாக, தமிழ்நாட்டில்தான் மிக அதிகம். இந்திய கல்வெட்டுகளில் 50 சதவீதம் தமிழகத்தில் உள்ளன. அவற்றுள் சுமார் 40,000 கல்வெட்டுகள் இதுவரை பெயர்த்து எழுதப்பட்டுள்ளன.

- அ.யாழினி பர்வதம், சென்னை.



''சாமி! எனக்கு எந்த இழப்பு வந்தாலும் சரி... ஆரோக்கியம் என்ன? ஆயுளே முடிஞ்சு போனாலும் சரி... நான் சட்டையே பண்ண மாட்டேன்.

என் சின்ன மகளுக்காவது... அந்தக் கோலம் ஏற்படாம இருக்கணும். அவ பூவோட பொட்டோட நித்ய சுமங்கலியா வாழணும்... அதுக்கு அருள் புரியணும் சாமி!''

''உன் சின்ன மக தான்... அதுக்கான பரிகாரத்தை செய்து முடிக்கணும்... அதுவரைக்கும் இதைப் பத்தி நீ யாரு கிட்டேயும் மூச்சு விடாதே...''

''சரிங்க சாமி! மிகப் பெரிய இழப்பு... அதன் மூலமா எனக்கு ஆரோக்கியக் கேடு... இது நிகழும் போது கண்டிப்பா பரிகாரத்துக்கான பதில் கிடைக்கும் இல்லையா சாமி?''

''நிச்சயமா...''

மலை போல் கனத்த மனதுடன் வீடு வந்து சேர்ந்து விட்டிருந்தாள் செண்பகம்.

இதோ... ஆர்.டி பணத்தை இழந்து விட்டிருக்கிறாள்.

அந்த சோகம் தாளாமல்... பக்கவாதம் வந்து விட்டது.

சாமியார் கூறியது போல்... பரணில்... நாகப்பாம்பு காட்சி அளித்து மறைந்தது...

அதன் பின்... மனிதத்தலை, பாம்பு உடலுடன் அந்த ஜடாமுடி முனிவரின் காட்சி...

அப்புறம்... அசரீரியாய் வந்த உத்தரவு...!

கண்ணீர் மல்க அந்த நோட்டை அலமாரியில் வைத்து விட்டு வந்தாள் ரத்னா.

''அம்மா! ஃபோன் பண்ணி நளினா அக்காவை வரச் சொல்லப் போறேன். அவ வந்து உன்னைப் பார்த்துக்கட்டும். நா கிளம்பிப் போறேன்...''

''எ... எங்கே...?''

''படப்பைக்கு... அந்த சாமியாரை சந்திச்சு... சில விஷயங்களைப் பத்திக் கேட்டு... நா தெளிவு பண்ணிக்கப் போறேன்.

அப்படியே... அங்கிருந்து... கொல்லி மலைக்குப் போலாம்னு இருக்கேன்...''

''இல்லேன்னா தூரம் நடந்திருக்கு. போகாம இருந்தா எப்படி?'' போய் என்ன பிராயச்சித்தம் பண்ணனுமோ? அதை செய்துட்டு வந்துட்டா... நமக்கு நிம்மதி கிடைக்கும் இல்லையா?''

''ஐயோ... நீ மட்டும் தனியாவா?... வேணாம்''

யார் செய்த பாவமோ? பாவத்துக்கான சாபம் விடாம தொடருதுல்ல?

அந்தப் பாவத்துக்கு ஒரு விமோசனம் தேட வேணாமா? அதுக்காக... நான் கண்டிப்பா போய் தான் ஆகணும்.

நளினா அக்கா கிட்டே... இந்த விஷயத்தைப் பத்தி நீ மூச்சு விட வேணாம்.

நான் எதையோ சொல்லி சமாளிச்சுட்டு... கிளம்பறேன். சரியா? பயப்படாதேம்மா...

அந்த ஜடாமுடி முனிவரோட முகத்தைப் பார்த்தேயில்ல?

தெய்வீகமான முகத்துல அப்படியொரு சாந்தம்... சாத்வீகம்!

விழிகள்லே ஒரு தீட்சண்யம்... அந்தக் கண்கள்லே அப்படி ஒரு கனிவு... பரண்லே நம்ம வீட்டுலேயே அவரோட காட்சி கிடைச்சிருக்கே?

அதை நெனச்சாலே... அப்படியே சில்லுன்னு மெய் சிலிர்க்குதும்மா...

யாருக்கு கிடைக்கும் இந்த பாக்கியம்?

அவரோட அவரும் அனுக்கிரகமும் பரிபூரணமா நமக்கு இருக்கு... அது துணையா நின்னு காக்கும்னு நம்புவோம்.

அந்த நம்பிக்கையில... நான் கிளம்பறேன்.

அவரு எந்த முனிவர்? அவரோட மகிமை என்னன்னு ஒண்ணுமே நமக்குத் தெரியலை.

நான் படப்பைக்குப் போய்...

காய்கறிகளின்
நிறம் மாறாமல் இருக்க
வேகவைக்கும் நீரில் சிறிது
உப்பைப் போட்டால் நிறம்
மாறாது.
-கேசவிநா, வேலூர்.






அந்த சாமியாரை சந்திச்சு இதைப் பத்தியெல்லாம் தெளிவா கேட்டுப் போறேன்...

''தனியாவா? பயமா இருக்கே... ரத்னா...''

கூறியபடி மறுப்பாய் கையை அசைத்தாள் செண்பகம்.

''ஏன்? சாமியாரால் எனக்கு ஏதாச்சும் ஆபத்து வந்திடுமோ?ன்னு பயப்படறியா?

சோழி போட்டு பார்த்து முகக்குறி பார்த்தே... நம்ம வம்சத்துல நடந்ததை எல்லாம்... புட்டுப் புட்டு வச்சாருல்ல? பயப்படாதம்மா நான் சின்ன குழந்தை இல்லை...

''போறப்போ... என்னோட ஜாதகத்தையும் கையில் எடுத்துட்டுப் போய்... அவரு கிட்டே காட்டறேன்.

அதைப் பார்த்துட்டா... இன்னும் விரிவா விளக்கங்கள் சொல்வாருன்னு... என் உள்மனசு சொல்லுது...''

ரத்னா பேசியதைக் கேட்டதும்... செண்பகம் சமாதானம் ஆகி விட்டாள்.

''ஆமா... என்னோடது ஜாதகம் பரண்லே... டிரங்க் பெட்டியில தானே இருக்கு? அக்காவுடையதும் அதுலே தானே கிடக்கு...

மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்கு நீ ஜெராக்ஸ் காப்பியைத் தானே குடுத்து அனுப்பினே...?''

''ஆமா ரத்னா... உன்னோடது... நளினாது... அப்பாது... என்து கூட... இருக்கு'' குழறி, குழறி பேசினாள்.

''சரி! முதல்லே அக்காவுக்கு ஃபோன் போட்டு கூப்பிடறேன். அதுக்கு அப்புறமா... அவ வர்றதுக்குள்ளே தேவைப்பட்டதை எடுத்துக்கிட்டு... அவ வந்ததும் கிளம்பிடறேன்...''

''ஜாக்கிரதை ரத்னா''

''சரிம்மா... வெளியூருக்கு இண்டர்வியூக்கு போறேன்னு சொல்லப் போறேன். நீயும் அப்படியே சொல்லு...''

அம்மா ஆமோதிப்பாய் தலையை அசைத்தாள்.

நளினாவுக்கு ஃபோன் செய்து விஷயத்தைச் சொல்லிவிட்டு ஒரு ஸ்டூல் ஒன்றை இழுத்துப் போட்டாள்.

உயரம் போதவில்லை. நாற்காலியை இழுத்துப் போட்டு அதன் மீது

ஸ்டூலை வைத்தான்.

ஸ்டூலின் மீது நிதானமாக ஏறினான். அது இலேசாக ஆடும் போது... இவனது உடலிலும் நடுக்கம் கிளை விட்டுப் படர்ந்தது.

டிரங்க் பெட்டியின் அடியிலேயே மறைவாய் சாவி இருந்தது. சாவியால்... அந்தச் சிறு பூட்டை திறக்க முயற்சித்தான்.

## 6

பெட்டியின் மீது நிறைய தூசு படிந்திருந்தது.

பூட்டு துருப் பிடித்துக் கொண்டது போலும்.

வெகு நேரம் போராடிய பின்பு தான்... அவனால் திறக்க முடிந்தது.

அம்மாவும் அப்பாவும் ஜோடியாய் இளம் வயதில் எடுத்துக் கொண்ட புகைப்படம்...

தாத்தாவின் பழைய படம்... சிம்மாசனம் போன்ற ஆசனத்தில் கம்பீரமாய் அமர்ந்திருந்தார்.

அவரது உடையும் தோற்றமும் வெகு ஆடம்பரமாய் இருந்தன.

முகத்தில் பணக்காரக்களை தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

அந்தப் புகைப்படத்தினை உற்றுப் பார்த்த போது...

தாத்தாவிற்குப் பின்னால்... சுவரில் ஆளுயரப் புகைப்படம் தொங்கிக் கொண்டிருப்பதை... ரத்னா கூர்ந்து நோக்கினான்.

அந்த ஆளுயரப் புகைப்படத்தில்... ஜமீன்தாரைப் போன்ற தோற்றத்துடன் நடுத்தர வயதில் ஒருவர் கைகளைக் கட்டியபடி நின்றிருந்தார்.

அந்த மனிதருக்கும் தாத்தாவுக்கும் சாயல் ஒத்துப் போனதை வைத்துப் பார்க்கும்போது... அவர் தனது கொள்ளுத் தாத்தாவாக இருக்க வேண்டும் என்று ரத்னா அனுமானித்துக் கொண்டான்.

ஒரு மஞ்சள் துணிப்பையில் ஜாதகங்கள் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தன.

அதிலிருந்த தனது ஜாதகத்தை மட்டும் தேடி எடுத்து தனியே



வைத்தான்.

பித்தளையிலான சிறு அம்மன் சிலை கறுத்துப் போயிருந்தது.

குத்து விளக்கு ஒன்று என்ணெய் விடும் இடத்தில் பச்சை படர்ந்து கிடந்தது.

அதை மெல்ல ஒதுக்கி விட்டு... பெட்டியின் அடியில் கையை விட்டுத் துழாவிய போது... சின்னஞ்சிறிய துணி முடிச்சு அகப்பட்டது.

துணி முடிச்சு மெத்தென்று வெல்வெட் போன்று வழுவழுப்பாக இருக்கவே... அதை எடுத்து ஊன்றிப் பார்த்தான் ரத்னா. அது...

அந்தக் காலத்து பட்டுத் துணியென்றும்... ஏதோ முக்கியமான பொருள் அதில் பொதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் புரிய... மெல்லத் திரும்பி... அதை அம்மாவின் பார்வைக்குப் படும்படியாகத் தூக்கிக் காட்டினான்.

''இந்த துணி முடிச்சுல என்னம்மா இருக்கு? பட்டுத்துணியில அப்படி என்னத்தை முடிஞ்சு வச்சிருக்கே?''

''நா எதுவும் முடிஞ்சு வக்கலை ரத்னா''

''பின்னே? யாரு முடிஞ்சு வச்சிருக்காங்க?''

'தெரியாது' என்பது போல் தலையை அசைத்தாள்.

''இத்தனை வருஷத்துல... நீ இதுலே என்ன இருக்கு?'ன்னு திறந்து பார்க்கவே இல்லையாம்மா?''

''நேர்த்திக் கடனுக்காக எப்பவோ யாரோ முடிஞ்சு வச்சதை... நாம்ப ஏன் பிரிச்சுப் பார்க்கணும்'னு... கம்முனு இருந்துட்டியா?''

''ஆமா... ரத்னா... சாமிக் குத்தமாயிடும்னு பயந்து நா அதைத் தொடவே இல்ல...''

''அப்பா இதைப் பத்தி ஏதாச்சும் உன் கிட்டே சொன்னாரா?''

''ஊகூம்... அப்பாவுக்கே இது பத்தி தெரியலைன்னு சொன்னதா ஞாபகம்...''

''அப்படின்னா... இதை தாத்தாவோ... இல்லைன்னா... கொள்ளுத் தாத்தாவோ முடிஞ்சு வச்சிருக்கலாம் இல்லையா?''

''எதுக்கு வம்பு ரத்னா? அதை அப்படியே வச்சுடு...'' அம்மா ஏகத்திற்கும் பயந்தாள்.

சிரித்தபடி தனது ஜாதகத்தையும் அந்தப் பட்டுத்துணியையும் சேர்த்து ஒரு கையில் பிடித்துக் கொண்டு... மெல்ல அந்த ஸ்டூலிலிருந்து இறங்கினான்.

ஜாதகத்தை சாமி மாடத்தருகே வைத்து விட்டு அந்தத் துணி முடிப்பை விளக்கு வெளிச்சத்தில் நிதானமாகப் பார்த்தான்.

''வேணாம் ரத்னா... சொன்னாக் கேளு...''

செண்பகம் குழறலாய் புலம்பியதைக் காதில் போட்டுக் கொள்ளாமல்... அங்கேயே சம்மணமிட்டு அமர்ந்தான்.

கம்பளிக் கயிறு வெகு இறுக்கமாக இருந்தது.

பல வருடங்களுக்கு முன்பு பலமாக கட்டப்பட்டு இருக்க வேண்டும்.

அவனால் அதை அவிழ்க்கவே முடியவில்லை.

படக்கென்று எழுந்து சாமி மாடத்தில் பூச்சரத்தை நறுக்குவதென்று வைத்திருந்த சிறு கத்தரிக்கோலை எடுத்து... அந்தக் கம்பளிக் கயிற்றை கத்தரித்தான்.

அறுத்த கயிற்றை தூக்கிப் போட்டு விட்டு... முடிச்சை நெகிழ்த்தி உள்ளே கையை விட்டு துழாவினான்.

ஒரு எலுமிச்சம் பழ சைஸில்... ஏதோவொன்று அகப்பட்டது. சட்டென்று எடுத்துப் பார்த்தான்.

வெளிச்சத்தில் அதை வைத்துப் பார்த்தபோது... ஜெகஜ்ஜோதியாக ஜொலித்தது.

''என்னது இது? இப்படி ஜொலிக்குதே? இது என்ன கல்லாக இருக்கும்?''

அம்மா செண்பகம் விழிகள் விரியப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

செண்பகத்திடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. ''ஏனம்மா? எனக்கு இன்னொரு சந்தேகம்...!

தாத்தா, கொள்ளுத் தாத்தாவோட படங்களைப் பார்த்தா... ஜம்முனு ஜமீன்தாரர்கள் மாதிரியில்ல... பணக்காரர்களையோட இருக்காங்க... நாமக்கல்லுக்கு பக்கத்துல ஏதோவொரு கிராமத்துல பெரிய பங்களாவுல வாழ்ந்தவங்க ஓஹோன்னு வாழ்ந்த பரம்பரையைச் சேர்ந்தவங்கன்னு பெருமையா சொல்லியே...?

போன தலை முறையில தான் நாம்ப நொடிஞ்சு போயிட்டோம்.





இல்லையா?''

''ஆ... மா''

''அப்படின்னா... அமோகமா வாழ்ந்த காலத்துல யாரோ ஒரு தாத்தா வைரக்கல்லை ரகசியமா முடிஞ்சு வச்சுட்டாரா?

சில வைரக்கற்கள் எதிர்மறையான பலன்களைக் கொடுக்கும்னு சொல்வாங்கல?

ஒரு வேளை... இந்த வைரம் வந்த ராசியால தான் நாம்ப நொடிஞ்சு போயிட்டோமா?

கண்டிப்பா இது ஒரு வைரமாத் தான் இருக்கணும்னு... என் மனசுக்குப் படுது...'' அந்தக்கல்லை திருப்பித் திருப்பிப் பார்த்தான்.




''ஐயோ... இதைப் போயி கையில வச்சுட்டிருக்கியே ரத்னா?

''பயப்படாதேம்மா... நடக்கிறதெல்லாமே அப்பாற்பட்ட செயலாத் தானே இருக்கு? நன்னா வர்ற நேரமாயிடுச்சு...''

அந்தக் கல்லை மீண்டும் பட்டுத் துணிக்குள் பொதிந்து வைத்தான்.

குன்றத்தூர் எல்லையில் இருக்கும் நாகவல்லி அம்மன் கோவிலுக்கு நாள் தவறாமல்... காலை ஆறரை மணிக்கு அம்மாவும் மகனுமாய் சென்று வருவது வழக்கம்.

அம்மன் கோவில் பூசாரிக்கு இவர்கள் மீது தனி மரியாதை தான்.

ரத்னாவுக்கு திடுதிப்பென்று பூசாரியின் ஞாபகம் தான் தலை தூக்கியது.

''அம்மா! பூசாரி ஐயா கிட்டே இதைக் காட்டி விவரம் கேட்கப் போறேன். இந்தக் கல்லைப் பார்த்தா... இது வைரமா? இல்லையா? இது என்ன ஜாதி கல்?னு... டக்குனு சொல்லிடுவாரு.

யார் யார் எந்த ராசிக்கல் அணியணும்? ராசிக்கல் ஒரிஜினலா?

நூபிக்கேட்டா?ன்னு... பார்த்தவுடனே சொல்றதுல அவரு கெட்டிக்காரர் ஆச்சே?''

செண்பகம் தர்மசங்கடமாய் விழித்துப் பார்த்தாள்.

''என்னம்மா அப்படி பார்க்கிறே? இது நான் ஊகிச்சபடி கெட்ட வைரமா இருந்தா... நம்ம வீட்டுல இதை வச்சிருக்கிறது பெரிய தப்பாச்சே? அப்படி மட்டும் இருந்துச்சுன்னா, கையோட இதை எடுத்துட்டுப் போறேன்.

படப்பை சாமியாரைப் பார்க்கும் போது... இந்த வைரத்தைக் காட்டி... அவர் கிட்டே யோசனை கேட்கப் போறேன்...''

மகன் கூறுவது செண்பகத்திற்கு சரியென்று பட்டது.

சம்மதத்திற்கு அறிகுறியாய் தலையை ஆட்டினாள்.

''போயிட்டு சீக்கிரமா வந்துடறேன்...''

ஹேண்ட் பேக்கில் துணிமுடிப்பை பத்திரப்படுத்திக் கொண்டு... கதவை ஒருக்களித்து சாற்றிவிட்டு வெளியேறினான் ரத்னா.

# 7

ரகு ஒரு முடிவெடுத்து விட்டால் அதை யாராலும் மாற்றவே முடியாது என்று அம்மா கல்யாணிக்கு நன்றாகவே தெரியும்.

கணவர் சேதுராமன் கோபத்தில் வழக்கம் போல் ஆகாயத்திற்கும் பூமிக்குமாக குதித்தார்.

மகன் ரகுவுக்குப் பரிந்து கொண்டு பேசினால்... எரிகின்ற தீயில் எண்ணெய் விட்டாற் போல ஆகி விடுமே? என்ற பயத்தில்... கல்யாணி வாயைத் திறக்கவே இல்லை.

ரகுவை கண்டித்துப் பேசவும் அவளால் இயலவில்லை.

ஒரே மகன்...

கணக்கு வழக்கில்லாமல் ஏகப்பட்ட சொத்து திரண்டிருக்கிறது. அத்தனைக்கும் ரகு தான் ஏக போக வாரிசு!



ரகுவிற்கு பிடிவாதம் ஜாஸ்தி.

நினைத்ததை சாதித்தே தீர வேண்டும். அதுவரை அவனுக்கு உறக்கம் வராது.

சாதாரணமாக... இந்த மாதிரி பணக்காரக் குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் தாம் தூம் என்று ஆடம்பரமாக செலவழிப்பார்கள்.

ஆனால் ரகு... நேர் மாறாக இருந்தான்.

அக்கறையாய் படித்தான். அனாவசியமாய் நண்பர்களுடன் அரட்டை அடிக்காமல் ஊர் சுற்றாமல்... புத்தகப் புழுவாய் இருந்து... ஒற்றைக் காலில் நின்று தனக்குப் பிடித்த தொல்லியல் துறையைத் தேர்ந்தெடுத்தான்.

படித்து முடித்து தொல்லியல் துறையில் இளம் ஆய்வாளராகவும் (ஆர்க்கியாலஜிஸ்ட்) ஆகி விட்டிருந்தான்.

பொழுது போக்கு அம்சங்கள் எதிலும் பிடித்தமே இல்லாதவன்.

தியானம், யோகா போன்றவற்றில் வெகு ஈடுபாடு கொண்டவன்.

கவியரசர் கண்ணதாசன் அவர்கள் எழுதிய 'அர்த்தமுள்ள இந்து மதம்' புத்தகத்தை... 'ஆயிரம் முறை வாசித்தாலும் சலிக்கவில்லை' என்று கூறுபவன்.

பெரியவர்கள் சொல்லி வைத்த ஒவ்வொன்றுக்கும் அர்த்தம் இருக்கும் என்று ஆணித்தரமாய் நம்புபவன்.

''நம்ம சித்தர்கள் தோற்றுவிச்ச யோகக்கலை... இன்னிக்கு உலகம் முழுக்கப் பரவியிருக்கு. வெளிநாட்டுக்காரங்க ரொம்ப ஆர்வமா தங்களோட உடலையும் உள்ளத்தையும் தூய்மைப் படுத்தி ஆரோக்கியமா வாழறதுக்கு... யோகக் கலை தான் சரியான சாய்ஸ்னு... சிலாகிக்கிறாங்க...

இண்டியன் மித்தாலஜி அவங்களை பிரமிக்க வைக்குது தெரியுமா? இண்டியன் மித்தாலஜியில அந்தக் காலத்துல சொல்லப்பட்ட அத்தனை விஷயங்களும்... இந்த விஞ்ஞான யுகத்துல நடைமுறைக்கு வந்திருக்கே?

திரேதா யுகத்துல... ராவணன் புஷ்பக விமானத்துல சீதையைக் கடத்திட்டுப் போனான்.

போன நூற்றாண்டுல ஃபிளைட்டை கண்டு பிடிச்சிருக்காங்க.

மாயக் கண்ணாடி மூலமா ஒருத்தரை ஒருத்தர் பார்த்துப் பேசிக்கிட்டாங்கன்னு... புராணக்கதையில நாம்ப வாசிச்சிருக்கோம்.

இப்போ... கம்ப்யூட்டர், நெட், வெப் கேமிரா ஆன் லைன் வசதிகள் மூலமா... கண்டம் விட்டு கண்டத்துல இருக்கிறவங்க கூட பார்த்து பேசிக்கிறோம்.

எத்தனை யுகங்களுக்கு அப்புறமா... அதை நடைமுறைப்படுத்தி இருக்கோம்?னு நெனச்சா மலைப்பா இருக்கு.

அதனால... இண்டியன் மித்தாலஜியில சொல்லி வைக்கப்பட்ட அத்தனையும் நூறு சதவீதம் உண்மைன்னு... ரொம்ப ஸ்ட்ராங்கா நம்பக் கூடியவன் நான்!

இதைப் பத்தி தீவிரமா ஆராய்ஞ்சா... நிறைய விஷயங்கள் கிடைக்கும். அந்த மாதிரி ஆராய்ஞ்சு 'தீஸிஸ்' ரெடி பண்ணணும்னு ரொம்ப ஆசையா இருக்கு...''

அன்பு மகன் ரகு சிலாகித்துப் பேசும் போது... அவனது மேதா விலாசத்தை, அறிவுப் பூர்வத்தை எண்ணிப் பெருமிதப்பட்டுக் கொள்வாள் கல்யாணி.

ஆனால்... சேது ராமனோ, ''என்ன கல்யாணி இது? ஊரு உலகத்துல இப்படியொரு பிள்ளை கிடைப்பானா?ன்னு பெருமைப்பட்டுக்கிறியா?

இவனோட போக்கை நெனச்சா வேதனையா இருக்கு. அவனைத் திட்டம் பண்ணி திருத்த வேணாமா? என்று மனைவியிடம் கோபத்தைக் கொட்டித் தீர்த்து விடுவார்.

மகனை விட்டுக் கொடுத்துப் பேச... கல்யாணிக்கு மனம் பொறுக்காது.

''என்னங்க நீங்க? அவன் அப்படியென்ன தப்பைப் பண்ணிட்டான்?

''டாக்டர் பட்டம் கிடைச்சும் தலைவர் ஏன் சோகமா இருக்கார்?''
''இன்ஸ்பெக்டர் பட்டம் கிடைச்சாதான் மாமூல் கிடைக்கும்னு யாரோ அவர் கிட்ட சொன்னாங்களாம்''

**–மு.மதிவாணன், அரூர்.**





திருத்து... திருத்து'ன்னு... என்கிட்டே கோபிச்சுக்கிறீங்க?

திருத்தற அளவுக்கு அவன் என்ன குத்தம் செஞ்சுட்டான்.

தன் மனசுக்குப் பிடிச்ச விஷயத்தை தான் செய்யப் பிரியப்படறான்...

இதுக்கு மேல நான் என்ன சொல்றது? நீங்களே உங்க பிள்ளை கிட்டே பேசுங்களேன்...''

சாமர்த்தியமாக நழுவி விடுவாள் கல்யாணி.

சேதுராமன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க தன் முன் மகன் வந்து நின்றால் போதும்...

அவர் வாயைத் திறப்பதற்கு முன்னால்... ரகு சாதுர்யமாக ஆரம்பித்து விடுவான்.

''அப்பா! ஏம்பா கவலைப்படறீங்க? என்னோட கடமையை நான் தட்டிக் கழிக்க மாட்டேன்.

எல்லா நிறுவனங்களுக்கும் நேரடியா தினமும் போய் தான் கவனிக்கணுமா? இது 'கம்ப்யூட்டர் யுகம் அப்பா!

நெட், லேப் டாப் ஆன் லைன்னு எவ்வளவோ வசதிகள் பெருகிப் போச்சு.

இருக்கிற இடத்துல இருந்தே... எல்லாத்தையும் கவனிச்சுக்க முடியும். நிர்வாகமும் திறம்பட பண்ண முடியும்.

தயவு செய்து என்னை நீங்க புரிஞ்சுக்கோங்க... என்னோட உணர்வுகளுக்கு மதிப்பு கொடுங்கப்பா... ப்ளீஸ்...''

அப்பாவின் கரத்தை வாத்சல்யத்துடன் பிடித்துக் கொண்டு உணர்ச்சி வசப்பட்டு ரகு பேசும் போது... அப்படியே சேதுராமன் நெக்குருகிப் போய் விடுவார்.

பொங்கிய பாலில் தண்ணீர் தெளிக்கப்பட்டது போல்... அவரது கோபம் புஸ்ஸென்று தணிந்து போய் விடும்.

மனைவி கல்யாணியிடம், ''இவனுக்கொரு கால் கட்டைப் போட்டுட்டா... பயல் தன்னால வழிக்கு வந்துருவான். நாம்ப சொன்னா... காதுலேயே போட்டுக்காம தான் தோன்றித் தனமா நடந்துக்கிறானில்ல...?

வர்றவ சொல்ற விதத்துல சொன்னா... கப்சிப்புன்னு அந்த வேலையை ராஜினாமா பண்ணிட்டு... நம்ம நிர்வாகப் பொறுப்பை ஏத்து நடத்த ஆரம்பிச்சுடுவான்.

தினமும் பத்து மணி ஆயிட்டா... ஆபீசுல ஒழுங்கா போயி எம்.டி.சீட்டுல உட்கார வச்சுடுவா... நம்ம மருமகள்'' என்று நம்பிக்கையுடன் பேசினார் சேதுராமன்.

கல்யாணப் பேச்சை எடுத்தாலே... ரகுவுக்கு எட்டிக் காயாக கசந்தது.

''தயவு செஞ்சு இப்போதைக்கு கல்யாணப் பேச்சை எடுக்காதீங்க... கல்யாணம் பண்ணிக்கிற மூடுலே நான் இல்லை... கொஞ்ச காலம் போகட்டும். அதுவரைக்கும் என்னை "ப்ரீயா விடுங்களேன். ப்ளீஸ்''

கையெடுத்துக் கும்பிடாத குறையாக கெஞ்சினான் ரகு.

''எங்களுக்கும் வயசாகிட்டே போகுதுல்ல? காலா காலத்துல ஒரு பேரக்குழந்தையை எடுத்துக் கொஞ்சணும்னு... ஆசை இருக்காதா?''

''என்னப்பா இது? உங்க ஆசைக்காக... விருப்பமே இல்லாம மண வாழ்க்கையில் ஈடுபட முடியாதுப்பா... சாரி''

''கல்யாணம் பண்ற வயசு தானே உனக்கு? ஏன் விருப்பமில்லைங்கிறே...?

ஒரு வேளை... யாரையாவது நீ விரும்பறியா? அப்படி இருந்தா... மறைக்காம சொல்லிடு ரகு!

எங்களுக்கு உன்னோட விருப்பம் தான் முக்கியம்! அந்தப் பொண்ணையே உனக்கு கட்டி வச்சுடறோம்...

அந்தஸ்து பேதம் பார்க்க மாட்டோம். எந்த ஜாதியா இருந்தாலும் பாதகமில்லை.

நீ விரும்பின பொண்ணோட... சந்தோஷமா மன நிறைவோட குடும்பம் நடத்தணும். அதைப் பார்த்து நாங்க ஆனந்தப்படுவோம். தயங்காம சொல்லு... நல்ல நாளா பார்த்து முறைப்படி அவங்க வீட்டுக்குப் போயி... பொண்ணைப் பேசி 'ஒப்புத்தாம்பூலம்' வச்சுடலாம்...'' என்றார் சேதுராமன்.

> உன் நினைவுகள் கசந்தால்...
> நினைத்த நாட்காட்டியில்
> நல்ல நேரம்
> கெட்ட நேரம் பார்க்கும் மனிதா!
> உன் இடைவிடாத
> முயற்சியே உனக்கு நல்ல நேரம்
> சோம்பலே உனக்கு கெட்ட நேரம்
> என்பதை
> உணர்ந்துக் கொள்
> உயர்ந்து நில்.
>
> -சங்கீத சரவணன், மயிலாடுதுறை.



என் மனசுக்குப் பிடிச்ச பெண்ணைத் தான்... நான் கல்யாணம் பண்ணிப்பேன்.

இதுவரைக்கும் அப்பேர்ப்பட்ட பொண்ணை நான் சந்திக்கலை. 'பார்த்தவுடனே இவ தான் மனைவி'... அப்படின்னு அழுத்தமா ஒரு எண்ணம் எனக்குள்ளே தலைதூக்கணும்.

அந்த மாதிரி ஒருத்தியை சந்திச்சதும்... நானே உங்க கிட்டே வந்து சொல்றேன் அப்பா...!

அது வரைக்கும் தயவு செஞ்சு... நீங்களும் அம்மாவும் கொஞ்சம் பொறுமையா இருக்கணும்...''

''அந்த மாதிரி நடந்தா... எங்களுக்கும் சந்தோஷம் தான் அவன் போக்கில் விட்டுப் பிடிக்கலாம் என்று பொறுமையுடன் தாக்குப் பிடித்தார் சேதுராமன்.

ஆனால்... ரகு இப்படி ஏடாகூடமாய் ஒரு முடிவெடுப்பான் என்று கனவிலும் கருதவில்லை.

## 8

அம்மா தான் ரகுவிடம் வெடித்துக் கொண்டிருந்தாள்...திடீர்னு என்னாயிடுச்சு? அதையெல்லாம் விட்டுட்டு சம்பந்தமே இல்லாம... ஏதோவொரு சித்தரைப் பத்தி கொல்லி மலைக்கே போய் ஆராயறியே.. நியாயமா ரகு?''

''பதஞ்சலி முனிவரைப் பத்தி ஆராயறதுக்கு நான் ரொம்பவே குடுத்து வைச்சிருக்கணும் அம்மா!

நீ அருமை புரியாம பேசறே... அவரு யாரு தெரியுமா? யோகக் கலையை அவர் தந்ததால... உலகம் முழுவதும் இந்தியாவுக்குதனி மரியாதை தெரியுமா?

அப்பேர்ப்பட்ட உன்னதமான யோகக் கலையைத் தோற்றுவித்தவர் தான் இந்த பதஞ்சலி முனிவர் போகர் மாதிரியே இவரும் ஒரு மகா சித்தர் தான்...

இவரோட சக்தியும் ஆற்றலும் அளப்பரியது... தெரியுமா? இவரும்

போகர் காலத்தைச் சேர்ந்தவரு தான்... அநேகமா இரண்டாயிரம் வருடங்களுக்கு முந்தைய காலகட்டம்னு நெனக்கிறேன்...''

''என்னடா சொல்றே? இரண்டாயிரம் வருஷங்களா?''

''ஏம்மா இதுக்கே இப்படி திகைச்சுப் போயிட்டே..? சித்தர்கள் காலத்தை வென்றவர்கள். இதுலே அதிசயப் படறதுக்கு ஒண்ணுமே இல்லை..

சித்தர்களுக்கு யுகங்கள் ஒரு பொருட்டே இல்லை...

காலத்தைக் கடந்து... என்றைக்கும் ஜீவிதம் செய்யக் கூடிய ஆற்றல் உடையவர்கள்... தெரியுமா?

நான் பதஞ்சலி முனிவரைப் பத்தி தான் ஆராயப் போறேன்...''

''எதுக்காக அவரை ஆராயணும்? உன்னோட தொல்லியல் துறையிலே... சித்தரைப் பத்தி ஆராய்ஞ்சுட்டு வான்னு ஆர்டர் போட்டுட்டாங்களா?''

''சேச்சே... அப்படியெல்லாம் இல்லம்மா... இது என்னோட தனிப்பட்ட விஷயம்... அவங்க இதுல சம்பந்தப்படலை...

ஆபீஸ் சார்பில் இல்லாம... என் ஆர்வத்தினால ஆராயலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்...

உடம்புக்கும் ஆத்மாவுக்கும் பரம திருப்தி... எல்லையில்லா பேரானந்தமா இருக்கு தெரியுமா?

அப்பத்துலே இருந்தே... நான் சித்தர்கள்... அவர்களோட மகிமைகள்...'' பத்தி நிறைய படிக்க ஆரம்பிச்சேன்.

காலப் போக்குலே... நான் அவரோட பக்தனாவே ஆயிட்டேன் தெரியுமா?

சமீபத்துல... ஒரு ஆச்சரியமான விஷயத்தைப் பத்தி நான் கேள்விப்பட்டதும்... திகைச்சுப் போயிட்டேன்.

போனவாட்டி... சிதிலமடைஞ்ச சிவன் கோவிலை ஆராயறதுக்காக சேலத்துக்குப் போனேன். ஊரோட எல்லையில காட்டுப் பகுதியிலே... அந்தக் கோவில் இருக்கு.

தூர்ந்து போன தெப்பக்குளத்தை அகழ்வாராய்ச்சி செய்யும் போது... தூரத்துல ஒரு துறவி ஒரு மரத்தடியில சிரசாசனம்



செய்துட்டிருந்தாரு...

என்னையும் அறியாம... நான் அவர் கிட்டக்கப் போனேன்.

சிரசாசனம் முடிக்கும் போது... 'ஜெய் பதஞ்சலி பவ...ன்னு முணுமுணுத்தாரு... என்னை ஏறிட்டுப் பார்த்தாரு...

உன்னைப் பார்த்தாலே தெரியுது... நீ யோகாசனம் பண்ணக் கூடியவன்.

'பதஞ்சலி மேல அப்படியொரு பக்தியா? அவரைப் பார்க்கணுமா?'ன்னு கேட்டாரு...

எனக்கு 'ஷாக்' அடிச்ச மாதிரி இருந்துச்சு. அதெப்படி சாமி நான் அவரைப் பார்க்க முடியும்?'னு கேட்டேன்.

'பதஞ்சலி மகா சிவ பக்தர். நடந்து போனா... நேரம் ஆகும்னுட்டு பாம்பு உடலை வரமா கேட்டு வாங்கிக் கிட்டவர். சிவ பூஜைக்கு சர சரன்னு ரொம்ப வேகமா ஊர்ந்து போயிடலாம்னு... அப்படியொரு உருவத்தை விரும்பி ஏத்துக்கிட்டாரு.

மனிதத் தலை... பாம்பு உடல்... சிறந்த தபஸ்வி மட்டுமில்லை... இன்றைக்கும் அதே மாதிரி சிவபூஜையை செய்துட்டு தானிருக்காரு'ன்னு சொல்லிட்டு... அந்தத் துறவி புன்னகைச்சாரு... அந்த நேரத்துல மரத்துல கட்டப்பட்டிருந்த மணி திடீர்னு தன்னிச்சையா ஒலிச்சது.

அவரை... எங்கே... எப்போ... பார்க்க முடியும்?''

''நல்ல மனசோடவும் தூய பக்தியோடவும்... அவரோட தரிசனம் கிடைச்சே ஆகணும்னு வேண்டிக்கிட்டு... கொல்லி மலைக்குப் புறப்படு...

மலையோட மையப் பகுதிக்குப் போ! அதுக்கு மேலே... நீ என்ன செய்யணும்கிறதை... பதஞ்சலி முனிவரே வழி நடத்துவாரு...''

''ரொம்ப நன்றி சாமி! இன்னிக்கு என்னோட அதிர்ஷ்டம் நான் உங்களை சந்திச்சிருக்கேன். எனக்கு அரிய தகவல் சொன்னதுக்கு நன்றி...''



ஆயிரம் வரிகளில்
எழுதிய என் காதல்
கடிதத்திற்கு
ஒற்றை வரியில்
அவளின் பதில்
''மௌனம்''
-சங்கீத சரவணன்,
மயிலாடுதுறை.

''எத்தனை தடங்கல் வந்தாலும் சரி... ஆபத்துகள் வந்தாலும் சரி... பதஞ்சலி முனிவரை தரிசிக்காம... நான் ஊருக்குத் திரும்ப மாட்டேன்'னு... அவர் கிட்டே சொல்லிட்டு தான் வந்தேன்.

பவுர்ணமி நெருங்குது... நான் இன்னிக்கே கிளம்பியாகணும். போறப்போ தடுக்காம... ஆசீர்வாதம் பண்ணி அனுப்பும்மா...''

கொஞ்சம் தொனியில் கேட்டான் ரகு.

சிலாகித்துப் போய் முகம் விகசிக்கப் பேசினான் ரகு.

இதற்கு மேல் தடுத்தாலும்... எந்தப் பிரயோகஜனமும் இல்லை என்று மனதிற்குப் பட்டதும்... கல்யாணி பூஜை அறைக்குச் சென்று விளக்கேற்றி ஆரத்தி காட்டினாள்.

''உன் ஆசைப்படியே பதஞ்சலி முனிவரை தரிசிச்சுட்டு பத்திரமா திரும்பி வாப்பா...'' விபூதியை நெற்றியில் பூசினாள்.

மகனின் இன்னொரு ஆசையும், சேர்ந்தே நிறைவேறும் என்று அவன் கனவிலும் கருதவில்லை தான்! அவன் அப்பாவும் ஜாக்கிரதையா போய் வாப்பா என்று வாழ்த்தினார்.

எங்க தலையில கல்லைத் தூக்கிப் போட்டுடாதேப்பா...''

கவனமா இருப்பா... ஏதாவது பிரச்சனை வந்தா உடனே திரும்பி வந்திருப்பா...'' நா தழுதழுக்க பேசினாள் கல்யாணி.

''அப்படியெல்லாம் எதுவும் நடக்காதும்மா... நா வரட்டுமா? தினமும் என் கிட்டேயிருந்து ஃபோன் வரும்னு எதிர்பார்க்காதீங்க...

காட்டுக்குள்ளே... மலைக்குள்ளே போனா... சுத்தமா சிக்னலே கிடைக்காது. தெரியுமில்ல... ஃபோன் வரலையே?ன்னு பயப்படாதீங்க...

உங்க புள்ளைக்கு எதுவுமே ஆகாது. அப்போ நா வரட்டுமா?''

அம்மாவின் கன்னத்தில் வழிந்தகண்ணீரைத் துடைத்துவிட்டு, அவளது கையை ஆதுரமாய் அழுத்தி... இருவரையும் பார்த்து தலையசைத்து விடைபெற்றான் ரகு.

## ←←←9→→→

நாகவள்ளி அம்மன் கோவிலுக்குள் அவசரமாய் விரைந்தாள் ரத்னா.



பிரகாரத்திலும் முன் மண்டபத்திலும் நல்ல காலமாய் கூட்டம் தென்படவில்லை.

இருந்த ஓரிரு பக்தர்களும் தரிசனத்தை முடித்துவிட்டுச் செல்லட்டும் என்று அமைதியாக பிரகாரத்தை ஒன்பது முறை வலம் வந்து முடித்தாள்.

பிரதட்சணத்தை முடித்து விட்டு வரும் போது... யாருமே கண்களில் தட்டுப் படவில்லை.

இவளைப் பார்த்ததும் பூசாரியின் முகம் மலர்ந்தது.

''அடடே ரத்னாம்மா... வழக்கத்துக்கு மாறா இந்த நேரத்துல வந்திருக்கீங்க?'' கேட்டபடி கர்ப்பக்கிரகத்திற்குள் நுழைந்து தீபாராதனை காட்டினார்.

கண்ணீர் மல்க... மனமுருக அம்மனைப் பிரார்த்தித்தாள். ஆரத்தியைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு தட்டில் ஐந்து ரூபாய் நாணயத்தைப் போட்டு விட்டு... பூசாரியை ஏறிட்டாள்.

''அம்மாவுக்கு திடீர்னு உடம்புக்கு முடியாம போயிடுச்சு. மனசு சரியில்லை. அம்மனை தரிசிச்சு வேண்டிக்கலாம்னு வந்தேன்...''

''உங்க வேண்டுதல் கண்டிப்பா நிறைவேறும். கேட்டவரத்தை தர்றவளாச்சே நாகவள்ளி? செண்பகம் அம்மா ஆரோக்கியமாகி வழக்கம் போல கோவிலுக்கு வரப் போறாங்க...''

''உங்க வாக்கு பலிக்கட்டும். ஐயா!... உங்க கிட்டே ஒரு விஷயத்தைப் பத்திக் கேட்கணுமே?''

''தாராளமா கேளுங்கம்மா...''

ஹேண்ட் பேக்கிலிருந்த பட்டுத்துணி முடிச்சை மெல்ல எடுத்தாள்.

உருண்டை வடிவில் பளபளத்த அந்தக் கல்லை வெளியில் எடுத்து அந்தப் பூசாரியிடம் நீட்டினாள்.

''இது வைரமா? இல்லையா?ன்னு பார்த்து சொல்லுங்கப்பா... பழைய டிரங்க் பெட்டியில கிடந்தது.

எங்க முன்னோர்கள் ஒஹோன்னு வாழ்ந்தவங்க... கிட்டத்தட்ட ஜமீன் பரம்பரைன்னு வச்சுக்கோங்களேன்...

''தலை சுத்தற மாதிரி இருக்கு டாக்டர்''
''இல்லையே; நேரா தானே இருக்கு!''
-கே.கவிதா, வேலூர்.



தாத்தா காலத்துல வைக்கப்பட்ட பட்டுத்துணி முடிச்சை... இதுவரைக்கும் வீட்டுல யாரும் பிரிச்சுப் பார்க்காமலேயே இருந்துட்டாங்க...''

''ஆஹா... ஜெகஜ்ஜோதியா ஜொலிக்குதே? கொண்டாம்மா...'' இரு கைகளையும் சேர்த்து நீட்டி அதை வாங்கி உற்றுப் பார்த்தார்.

'இது ரொம்ப ரொம்ப விலை மதிக்க முடியாதது தான்...''

''அப்படின்னா... வைரந்தானா? வைரத்துல இது நல் வைரமா? கெட்ட வைரமா?ன்னு பார்த்து சொல்லுங்களேன்... ப்ளீஸ்...''

அவசரமாய் இடைமறித்துப் பேசியவளை ஊன்றிப் பார்த்தார் பூசாரி...

''இது வைரமில்லைம்மா...''

''வைரம் இல்லையா? இது ரொம்பவும் விலைமதிக்க முடியாததுன்னு... இப்போ தானே நீங்க சொன்னீங்க ஐயா...?''

திகைப்புடன் அவரை ஏறிட்டாள் ரத்னா.

''வைரம் மட்டும் தான் விலை மதிக்க முடியாததா? இது காணக் கிடைக்காத பொக்கிஷம் ரத்னாம்மா... கொஞ்சம் இருங்க... இதோ வந்துடறேன்...''

கருவறைக்குள் வேகமாய் சென்று கூர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் வெளிப்பட்டார்.

''சேதுக்கப்படலை... பட்டை தீட்டப்படலை, இது சுத்த அசல் தான்... சந்தேகமே இல்ல... இது அதே தான்...''

''அதே தான்னா...?''



''வைரத்தையாவது... பணத்தைக் கொட்டிக் குடுத்தா... விலைக்கு வாங்கிடலாம். அது சுலபமா கிடைச்சுடும்.

ஆனா... இது கிடைப்பதற்கு அரியதாச்சே?''

''பீடிகை போட்டே பேசறீங்களே ஐயா? இது எந்த வகையைச் சேர்ந்த கல்லு...?''

''அத்தனை நவரத்தினங்களுமே பூமியிலேர்ந்து கிடைக்கக் கூடியது தான்... ஆனா.. இது மட்டும் உசத்தி! இது பூமியிலேர்ந்து கிடைக்காது...''

''இது... எதிலேர்ந்து கிடைச்சிருக்கு ஐயா?'' பூசாரி பூடகமாகப் பேசப் பேச... ரத்னாவுக்கு ஆர்வம் தாங்க முடியவில்லை.

பூசாரி சுற்றும் முற்றும் ஒரு பார்வை பார்த்துக் கொண்டார்.

''இதை... என் கிட்டே கொண்டாந்து காமிச்ச மாதிரி... வேற யாரு கிட்டேயும் காட்டிராதீங்க ரத்னாம்மா...'' கிட்டத்தட்ட ரகசியம் பேசுவது போல் கிசுகிசுப்பாய் பேசினார் பூசாரி.

அவரது பேச்சு, செயல்... எல்லாமே ஒரு தினுசாய் இருக்கவே... ரத்னாவிற்கு இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

''காட்டினா... என்ன ஆகும்?னு நினைக்கிறீங்க ஐயா?''

''என்ன வேணும்னாலும் நடக்கும். இப்பேர்ப்பட்ட பொக்கிஷத்தை அடையறதுக்காக... கொலை, களவுன்னு எதை வேணாலும் செய்யத் துணிஞ்சுடுவாங்க... ஜாக்கிரதையா இருங்க ரத்னாம்மா''

''ஐயா! இது என்ன?ன்னு வெளிப்படையா சொல்லுங்கப்பா...'' கெஞ்சும் தொனியில் கேட்டாள்.

''இது நாக மாணிக்கம்...! நாக ரத்தினம்னு கூட சொல்வாங்க''

''என்னது? நாக மாணிக்கமா?'' திடுக்கிட்டாள் ரத்னா.

ரத்னா திரு திருவென்று விழித்தாள்.

''முதல்லே இதைப் பிடிங்க ரத்னாம்மா...! பத்திரமா உள்ளே வைங்க...''

துரிதப்படுத்தினார் பூசாரி. அதைக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

மௌனமாய் அவரது பேச்சுக்கு கட்டுப்பட்டாள்.

பட்டுத் துணிக்குள் பொதிந்து முடிச்சிட்டு... ஹேண்ட் பேக்கினுள் வைத்து விட்டு நிமிர்ந்தாள். அவளது கைவிரல்கள் நடுங்கிய வண்ணம் இருந்தன.

''இதுஎப்படிங்க ஐயா... எங்க தாத்தாக்கள் கையில கிடைச்சிருக்கும்? என்னால இதை நம்பவே முடியலை..''

''பல வருஷமா உங்க வீட்டுலேயே கிடந்திருக்கு. யார் கண்ணுக்கும் படாம இருந்தது... ஆச்சரியமான விஷயம் தான்... சரி! இப்பத்தான் இது... வெளிப்படணும்னு பிராப்தம் போலிருக்கு.

உங்க முன்னோர்கள் கையில இது எப்படி கிடைச்சதோ. 'யாமறியோம் பராபரமே'...!

ஆனா... நாக மாணிக்கம் எப்படி உருவாகுது?ன்னு கேட்டா... என்னால தெளிவாகச் சொல்ல முடியும்...''

''சொல்லுங்க ஐயா...! நானும் தெரிஞ்சுக்கிறேன்...'' பணிவாய் கேட்டாள்.

''பல வருஷமா ஒரு பாம்பு யாரையும் தீண்டாம... விஷத்தை இழக்காம இருந்தா... காலப் போக்குல அந்தப் பாம்பு சிறிதாகிடும், ஆனா.. நாக மாணிக்கக் கல்லாகி விடும்.''

இதோட அமைப்பு, நிறம் இப்படித்தான் இருக்கும்னு... பார்த்த உடனே சொல்லிடுவேன். எழுபதாண்டு கால அனுபவம்...!''

''ரொம்ப நன்றிங்க ஐயா! வேற யாரா இருந்தாலும் இவ்ளோ தெளிவா தெரிஞ்சு வச்சிருக்க மாட்டாங்க... தெரிந்திருந்தாலும்... என்னை ஏமாத்தத் தான் பார்ப்பாங்க...

அதுக்கு தான் நான் உங்களைப் பார்க்க வந்தேன்... நன்றி ரொம்ப நன்றி ஐயா...''

கை கூப்பி விட்டு விடை பெற்றாள் ரத்னா.

'நாகப் பாம்பிடமிருந்து இந்த நாகமாணிக்கக் கல்லை எப்படி கைப்பற்றி இருப்பார்கள்?

யார் கைப்பற்றினார்கள்?

இது ஒரு நாகமாணிக்கக் கல் என்று தெரிந்ததிலிருந்து... ஒரு நூதனமான உணர்வு ஏற்பட்டுவிட்டதே.



கை விரல்கள் நடுங்கித் தொலைக்கின்றன.

யாருடைய பொக்கிஷத்தையோ... அபகரித்து வைத்துக் கொண்டிருப்பதைப் போன்று... மனசாட்சி ரம்பமாய் அறுத்தது.

இதை இழந்தபின்... அந்த நாகப்பாம்பு என்ன செய்திருக்கும்? பல வருடமாக வாயில் பாதுகாத்து வைத்த நாகமாணிக்கத்தை இழந்து விட்டு... வேதனையில் துடித்திருக்குமே?

தேடி அலைந்து பரிதவித்திருக்குமே...?

ஒருவேளை... அந்தப்பாவம் தான் தொடருகிறதோ? பாம்பு சாபமிட்டு விட்டதோ?

நாகமாணிக்கக் கல்லை அபகரிக்கும் பொருட்டு... அந்த நாகப் பாம்பை அடித்துக் கொன்றிருப்பார்களோ?

செய்தாலும் செய்திருப்பார்கள்.

அந்த பாம்பு ஆங்காரம் தாளாமல் சாபம் விட்டிருக்கும் கண்டிப்பாக... இப்படித்தான் நடந்திருக்கும் .

'பொக்கிஷத்தை சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்து விடு' என்று பரணில் காட்சியளித்த முனிவர் கூறினாரே?

இதற்கு எப்படி பிராயச்சித்தம் செய்யப் போகிறேன்... இதை எப்படி எங்கு கொண்டு போய் சேர்ப்பதாம்?

கோவிலில் இருந்து வீட்டை அடைந்தபோது... அக்கா நளினா அம்மாவின் கால்மாட்டில் அமர்ந்திருந்தாள்.

இவளைப் பார்த்ததும் கண் கலங்கி அழுது புலம்ப ஆரம்பித்தாள்.

அவளை சமாதானப்படுத்தி விட்டு... அம்மாவை ஏறிட்டாள். இமைகொட்டாமல் ஆர்வமாய் பார்த்தவளிடம்... 'அது ஒன்னும் இல்லைம்மா... சாதாரண கண்ணாடிக் கல் தானாம்' என்று பொய் மூட்டையை அவிழ்த்து விட்டு... துரிதமாக செயல்பட்டாள்.

டிராவல் பேக், ஒரு ஹேண்ட் பேக் சகிதமாக... கிளம்பி விட்டிருந்தாள் ரத்னா.

பட்டினத்துச் செல்லும் பேருந்தில் ஏறி அமர்ந்தாள்.

விதியும் பின் தொடர்ந்தது.

# 10

பேருந்திலிருந்து மெல்ல உதிர்ந்தாள் ரத்னா.

பட்பை மிகச்சிறிய கிராமமாகத் தான் காட்சியளித்தது.

அந்தி நேரம்...!

ஊரின் ஒதுக்குப்புறத்தில் அரச மரத்தடியில் தானே... அந்த சாமியார் சோழி போட்டு முகக்குறி பார்த்து குறி சொல்வதாக... அம்மா கூறினாள்.

ஆங்காங்கே விசாரித்து வழி தெரிந்து கொண்டு... விறுவிறுவென்று நடந்தாள்.

மேகமூட்டமாய் வேறு இருந்தது.

கால் மணி நேரத்தில்... அந்த இடத்தை அடைந்து விட்டாள். அவளுக்கு அநியாயத்திற்கு மூச்சிரைத்தது.

கூப்பிடு தொலைவில் சிறு பர்ணசாலை...

அந்த அரசமரத்துக்கு அருகே வந்து நின்றாள்.

ஈ காக்கா கூட தென்படவில்லை, டிராவல் பேக்கை கீழே வைத்தாள். காற்று விர்ரென்று சுழன்றடித்தது.

'அந்த சாமியாரைக் காணோமே ? இவ்வளவு தொலைவு தேடி வந்தது வீணாய் போகுமா?

அவர் எப்போதும் இங்கு தான் இருப்பார் என்றல்லவா கேள்விப்பட்டேன்?

எங்கு சென்று விட்டார்? எப்போது அவர் வருவார்? என்று ஒன்றுமே தெரியவில்லையே...?

சற்று நேரத்தில் இருட்டத் தொடங்கிவிடுமே...

சரி... இனி... இங்கிருப்பது உசிதம் அல்ல... கிளம்ப வேண்டியது தான்... வீட்டிற்கே திரும்பவும் போய் விடலாமா? ஊகூம்... முன் வைத்த காலைப் பின் வைக்கவே கூடாது. நேராக பஸ்ஸேறி கொல்லிமலைக்குச் சென்று விட வேண்டியது தான்...'



பெருமூச்செறிந்தபடி டிராவல் பேக்கை எடுத்துக் கொண்டு நடக்க யத்தனித்தாள்.

''வெளியூரிலிருந்து ஸ்வாமிஜியைப் பார்க்கவா வந்தீங்க?'' என்ற குரல் கேட்டுத் திரும்பினாள்.

இளம் துறவி நின்று கொண்டிருந்தார்.

''ஆமா... அவர் எப்போ வருவாரு?''

''அதோ அந்த மேடையைப் பாருங்க'' அவர் சுட்டிக்காட்டிய திசையில் திரும்பிப் பார்த்தாள். சற்று தூரத்தில்...

புதிதாய் மேடை கட்டப்பட்டிருந்தது. வித்தியாசமாய் மலர்கள் தூவப் பட்டிருந்தது.

அதன் சிறு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்திருந்தார்கள். பக்கத்தில் தூங்கா மணி விளக்கு...

மேடைக்கு கீழே இரு துறவிகள் சம்மணமிட்டு அமர்ந்து துளசி மாலையை உருட்டியபடி ஏதோவொரு மந்திரத்தை ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்.

திகைப்புடன் மீண்டும் இளம் துறவி மீது பார்வையைப் பதித்தாள்.

''ஸ்வாமிஜியை நீங்க பார்க்க முடியாது... ஏன்னா... அவரு இதோ அங்க தான் ஜீவ சமாதி அடைஞ்சுட்டாரு...''

திக்கென்ற உணர்வில் ஆடிப் போனாள் ரத்னா.

''அடக்கடவுளே...! எப்போ...?''

''இன்னிக்கு பதினாறாவது நாள்...''

''சமீபத்துல எங்கம்மா அவரைப் பார்த்தப்போ... என்னை இங்க வந்து தன்னைப் பார்க்கும்படி உத்தரவு போட்டிருந்தாரே?

அதனால தானே நம்பிக்கையோட தனியா புறப்பட்டு வந்தேன்? இப்போ... அவர் மேல மலையளவு நம்பிக்கை வச்சிருந்தேனே?

என்னிக்குமே... பார்க்க முடியாம போயிடுச்சே?''

அதிர்ச்சியில் அவளையும் அறியாமல் புலம்பி விட்டாள்.

தேசிய மொழிகள் தவிர நம் நாட்டில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை 1652 ஆகும்.
-ஸ்ரீமஞ்சரி, கிருஷ்ணகிரி.

தழுதழுத்தான்.

''அவரு வாக்குத் தவற மாட்டாரு. உங்களுக்கு தேவையான விளக்கம் கிடைக்கும்...'' நீங்க சமாதிக்கிட்டப் போய் கொஞ்ச நேரம் தியானம் பண்ணுங்க...''

சமாதானப் படுத்தினார் இளம் துறவி.

அரை மனதாய் வேறு வழியின்றி அந்த மேடையருகே சென்றான்.

அங்கிருந்த ஓரிரு துறவிகளும் ஜெபத்தை முடித்துவிட்டு எழுந்து... தூரத்திலிருந்த பர்ணசாலையை நோக்கிச் செல்லத் தொடங்கினர்.

டிராவல் பேக்கையும், ஹேண்ட் பேக்கையும் ஓரமாய் வைத்து விட்டு... மேடைக்கு அருகில் கீழே அமரப்போனான்.

''கீழே வெறும் தரையில் உட்காராதீங்க... இதோ இந்த ஓலைப்பாயைப் போட்டு... உட்கார்ந்து தியானம் பண்ணுங்க...''

இளம் துறவி ஓலைப்பாயை அவனிடம் நீட்டி விட்டு... அந்த இடத்தை விட்டு நாதுக்காய் நகர்ந்தார்.

ஓலைப்பாயில் அமர்ந்து விழிகளை மூடினான்.

ஒரு சில கணங்களில் எண்ணங்களின் அலைப்புறுதல்... தியானத்திற்கு அடங்கியது. மனம் வெற்றுத் தாளானது. அடுத்த சில கணங்களில்...

அந்த மேடையின் மையப்பகுதியில் ஏதோவொரு வினோதமான சப்தம் கேட்டது.

ரத்னாவின் நெற்றி சுருங்கியது.

சோழிகளை தரையில்... மேடையில் வேகமாய் வீசிப் போட்டது 'போன்ற ஓசை கேட்டதும்... ஆடிப் போனான் ரத்னா.

சில்லென்று மேனி புல்லரித்தது.

# ←←11→→

விழிகளைத் திறந்து பார்ப்பதற்கு... ரத்னா முயலவில்லை. தயக்கம்



தடை போட்டது.

தனிமை தந்த அச்சம்... அவனது பிடரியை சில்லென வருடியது.

'சோழிகளை யாரோ உருட்டுகிறார்கள்? அதுவும் மேடை மீது அமர்ந்தபடி உருட்டுகிறார்கள்?

சோழிகளை மற்ற சிஷ்யர்கள் யாராவது உருட்டுகிறார்களோ?

ஊகூம்... அப்படியிருக்க முடியாது.

ஜீவ சமாதி அடைந்த மேடை மீது... யாரும் துணிந்து ஏறவோ அமரவோ மாட்டார்களே?

பிரதிஷ்டை செய்யப் பட்ட லிங்கத்தின் அருகில்... அதாவது மேடையில் நடுப்பகுதியில்... சோழிகள் உருட்டப்படுகின்றன.

சிஷ்யர்கள் யாரும் மேடையருகில் இல்லையே...? இளம் துறவி கூட நடந்து சென்று விட்டாரே?

அவர் வெகு தூரம் சென்று விட்டார் என்று... அந்த நடைச்சத்தம் தேய்ந்து உணர்த்தியதே...?

அப்படியென்றால்... இங்கு சோழியை உருட்டுவது ஸ்வாமிஜி தானா?

ஆம்... அப்படித்தான் இருக்க வேண்டும்...

இளம் துறவி பூடகமாய் இதைப்பற்றி தான் சொன்னாரோ? 'நம்பிக்கையோடு தியானம் செய்யுங்க... உங்களுக்குத் தேவையான விளக்கம் கிடைக்கும்' என்று சொன்னது சரியாய் போய் விட்டதே...?

கண்களைத் திறந்து பார்த்து... இந்த ஸ்வாமிஜியை தரிசித்து... விளக்கம் கேட்டு விடலாமா?

ஒருவேளை... விழிகளைத் திறந்து பார்ப்பது தவறாய் போய் விட்டால்...?

'ஓம்...' என்ற ஓசை கேட்கிறதே...? இது தான் ஸ்வாமிஜியின் குரலா?

கணீரென்று குரல் தெய்வீகமாய் ஒலிக்கிறதே? கண்களைத் திறந்து தரிசிக்க முடியாவிட்டாலும்... இவரது குரலைக் கேட்கும் பாக்கியம் கிட்டியதே...?

ஏதாவது சொல்லப் போகிறாரோ?

உன்னிப்பாய் ஆர்வமாய் செவி மடுத்தான் ரத்னா.

''ரத்னா! நான் சொன்னபடியே.. நீ என்னைத் தேடி வந்திருக்கே... முன்னோர்கள் செய்த பாவத்துக்கு... பிராயச்சித்தம் செய்றதுக்கு ஆயத்தமாக இருக்கிறியா?'' என்ற குரல் கேட்டது. அவனுக்கு மெய் சிலிர்த்தது.

அப்போதும் அவன் விழிகளைத் திறக்கவில்லை.

''ஆமா ஸ்வாமிஜி! அது என் கடமை...! நான் என்ன செய்யணும்?''

''பாவம் விடாம... உங்க வம்சத்தைத் துரத்திட்டு இருக்கு. அந்தப் பாவத்திற்கு ஒரு பரிகாரம் செய்யணும். இல்லையா?''

''கட்டாயம் செய்யணும் ஸ்வாமிஜி, நான் செய்துடறேன்...''

''நாக சதுர்த்தியில பிறந்தவன் நீ... நாக சதுர்த்தியில பிறந்த கன்னிப் பொண்ணு பவுர்ணமி அன்னிக்கு...

உத்தரவு வந்ததும்... ரத்தம் சிந்தணும். உன்னதமான ரத்தம் பாவத்தைத் துடைக்கும்.

கத்தியாலோ மற்ற ஆயுதங்களாலோ வெட்டி ரத்தம் வர வைக்கக் கூடாது.

ஆயுதங்களை உபயோகிக்காம... ரத்தம் சிந்தணும். இது தான் பரிகாரம்.

இதைச் செய்துட்டா... இது காலம் வரை தொடர்ந்த பாவம் சுத்தமா நீங்கிடும். இனி உங்க வம்சத்துக்கு எந்தக் கெடுதலும் வராது... ரத்தம் சிந்த நீ தயாரா?''



பணம் இருந்தால்
உன்னை உனக்குத்
தெரியாது. பணம்
இல்லாவிட்டால்
யாருக்கும் உன்னைத்
தெரியாது.
-ஸ்பெயின் பழமொழி.
-ஆர்.பிரகாசம், திபலை.

''உயிரைக் கூட நான் தரதுக்கு சித்தமாயிருக்கேன் ஸ்வாமி? கொல்லி மலையில் எந்த இடத்துல நான் ரத்தம் சிந்தணும்?''

''ஸ்வாமிஜி! எங்க முன்னோர்கள் என்ன பாவம், எப்போ செய்தாங்க? அது என்ன பாவம்?

நீங்க சொன்னபடி... பரண்லே இந்த நாக மாணிக்கக் கல் கிடைச்சது ஸ்வாமிஜி!



பரண்லே ஒரு முனிவரோட தரிசனமும் கிடைச்சது. காணக் கிடைக்காத பொக்கிஷத்தை... சேர்க்க வேண்டிய இடத்துல சேர்த்துடு'ன்னு... அசரீரியா அந்த முனிவர் சொன்னாரு...

இதை எங்கே? எப்படி சேர்க்கணும் ஸ்வாமிஜி?''

கேள்விகளை சரமாரியாக தொடுத்தான் ரத்னா.

மந்தகாசமாய் ஸ்வாமிஜி நகைப்பது... அவனுக்கு கேட்டது.

''உன் கையில இருக்கிற பொக்கிஷம் பத்திரம்...!

உன்னோட ஒவ்வொரு கேள்விகளுக்கும்... பதில் தானாகவே கிடைக்கும். உடனே கொல்லி மலைக்குப் புறப்படு... இந்தா விபூதி...!''

அவன் சட்டென்று கண்களைத் திறந்து பார்த்தான். ஆனால்... அங்கு யாருமே இல்லை...

அந்த இடத்தில்... அகன்ற தேக்கு இலை ஒன்று இருந்தது. சட்டென்று மேடையை ஒட்டி நின்று... உற்றுப் பார்த்தான்.

கைக்கு எட்டும் தூரத்தில்... அந்த இலை இருந்தது. அதில் வெள்ளையாக ஏதோ தட்டுப்பட்டது.

கையை நீட்டி அந்த இலையை மெல்ல தன்னருகே இழுத்தான்.

கம கமவென்று விபூதியின் நறுமணம்... காற்றில் வியாபித்தது.

''உடனே கொல்லி மலைக்குப் புறப்படு... இந்தா விபூதி!'' என்றாரே ஸ்வாமிஜி?

இது கனவோ நனவோ என்று குழம்பினேன்.

'குழப்பம் வேண்டாம் மகனே...! இது நிஜம்தான்' என்றுவிபூதியை தந்து... நடந்தது அத்தனையும் தத்ரூபம் தான் என்று நிரூபித்து விட்டாரே...?

ஜீவ சமாதி அடைந்தாலும்... நாடி நம்பி வந்தவனுக்கு கருணை காட்டி விட்டாரே?

தேக்கு இலையைக் கையில் எடுத்துக் கொண்டான்.

பயபக்தியுடன் விபூதியைத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டு... தேக்கு இலையை வாகாய் மடித்து பத்திரமாய் ஹேண்ட் பேக்கினுள் போட்டுக் கொண்டான்.

மேடையைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டாள். மேடையில் தூவப்பட்டிருந்த உதிரிப் பூக்களில் ஒன்றை எடுத்து கூந்தலில் சூடிக் கொண்டாள்.

கரங்களைக் கூப்பி மனமுருக வணங்கினாள்.

'ஜீவ சமாதி அடைந்த மகான்... எனக்காக மனமிரங்கி அருள் புரிஞ்சிருக்காரே?

இதுக்கு நான் அனந்த கோடி நன்றி சொல்லணும் ஸ்வாமிஜி'

கண்ணீர் மல்க மீண்டும் அந்த மேடையைத் தொட்டு விட்டு. மண் தட்டிலிருந்து சோழிகளை ஊன்றிப் பார்த்து விட்டு... கீழே கிடந்த டிராவல் பேக்கை எடுத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினாள்.

எதிரில் வேக வேகமாய் அந்த இளம் துறவி வந்து கொண்டிருந்தார்.

''என்னம்மா? ஸ்வாமிஜி கிட்டே என்ன எதிர் பார்த்து வந்தீங்களோ? அது கிடைத்ததா?''

''ரொம்ப நன்றி ஸ்வாமி! இப்படியொரு அற்புதம் நடக்கும்னு... நான் நெனச்சே பார்கலை... அவரோட தெய்வீகமான குரலைக் கேட்டேன். சோழிகளை உருட்டிப் போட்டுட்டு... எனக்கு என்னென்ன சொல்லணுமோ... அத்தனையும் சொல்லிட்டாரு...

கைகளைக் கூப்பி விட்டு... விரைவாய் நடக்க ஆரம்பித்தாள்.

அங்கிருந்த காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திற்குச் செல்ல வேண்டும். கொல்லிமலைக்கு நேரடியாக எந்த பேருந்தும் செல்லாது. நாமக்கல் வரை சென்று... அங்கிருந்து வேறொரு வண்டி மாறிப் போக வேண்டியது தான்...

எண்ணமிட்டபடி நடையை எட்டிப் போட்டாள் ரத்னா.

## 12

சேலைக் கொசுவத்தை சற்றே உயர்த்திப் பிடித்தபடி வேகமாய் நடந்தபோது... ஹேண்ட் பேக்கிலிருந்து செல்ஃபோன் செல்லமாய் சிணுங்கியது.



எடுத்துப் பார்த்தபோது திரையில்... அக்கா நளினாவின் நம்பர்...!

''அக்கா! கொஞ்சம் நேரங்கழிச்சு... நானே கூப்பிடறேன்'' பதிலுக்கு காத்திராமல் சட்டென்று ஃபோனை அணைத்து விட்டாள்.

நான்கடி தூரம் கூட போகவில்லை.

மீண்டும் செல் அலறியது.

இந்த முறை எடுத்துப் பார்த்தபோது... ரத்னா திகைத்துப் போய்விட்டாள்.

'நாதன் எதற்கு எனக்கு போன் செய்கிறான்? அது தான் முற்றுப் புள்ளி வைத்தாகி விட்டது.

இனி என்னிடம் என்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறதாம்?

ஃபோனை அட்டெண்ட் செய்யாமல் விட்டு விட வேண்டியதுதான்.

வேண்டாம்... எடுத்து கறாராக பேசி... இனி ஃபோன் செய்து தொந்தரவு செய்ய வேண்டாம் என்று சொல்லிடலாம்...'' சற்று நிதானித்து நின்றாள்.

''ஹலோ...'' மிஸ்டர்...! என்னத்துக்கு ஃபோன் பண்றீங்க? நமக்குள்ளே எந்த பந்தமும் இல்லைன்னு முடிவாயிடுச்சு இல்லை...?

படிச்சவரு நீங்க... நாகரீகமா விலகிடறது நல்லது. எந்தக் காரணத்தைக் கொண்டும்... இனி ஃபோன் பண்ணாதீங்க''

குரலில் கண்டிப்பு தொனிக்க திட்டவட்டமாய் பேசிவிட்டாள்.

மறுமுனையில் அவன் ''ரத்னா! நா சொல்றதைக் கேளேன்...'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல்... பட்டென்று ஃபோனை அணைத்து விட்டாள்.

''இவனொருத்தன்... பொறுக்கி! நேரங் காலம் தெரியாம ஃபோன் பண்ணி கழுத்தை அறுக்கிறானே?''

தனக்குள் முணுமுணுத்தபடி ஃபோனை ஹேண்ட் பேக்கில் வைத்து விட்டு... விடு விடுவென்று நடந்தாள்.

மரங்களின் நிழல் தந்த இருட்டில் மறைந்த படி... நாதனும் அவளைப் பின் தொடர்ந்தான். அவனுடன் இன்னொரு உருவமும் பதுங்கியபடி நடந்தது.

வாஸ்தவத்தில்... அவன் தற்செயலாக படப்பைக்கு அன்று மதியமே வந்து விட்டிருந்தான்.

புறநகர்ப் பகுதியில் ஒரு கீரைத் தோட்டம் மலிவான விலைக்கு வந்திருப்பதாகவும் நேரில் வந்து நிலத்தைப் பார்வையிட்டு... பிடித்திருந்தால் விலை பேசி முடித்து விடலாம் என்று நண்பன் ஒருவன் ஃபோன் செய்து சொல்லவும்... நாதன் படப்பைக்கு கிளம்பி வந்தான்.

கீரைத் தோட்டத்தைப் பார்வையிட்டு அடிமாட்டு விலைக்கு பேரம் பேசி படிந்து வராமல் போகவே... ஏமாற்றத்துடன் நண்பனுடன் சேர்ந்து தண்ணியடித்து அரட்டைக் கச்சேரி நடத்தி வெட்டியாய் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தான்.

அந்த வளைவில் திரும்பி நடந்து வந்த இளம் பெண்ணை உற்றுப் பார்த்து அது ரத்னா என்று தெரிந்து கொண்டு மரத்தின் பின்னால் மறைந்து நோட்டமிட்டான்.

''டேய் என்னடா? இவ உனக்கு நிச்சயம் பண்ணின பொண்ணு தானே? இங்க என்னத்துக்கு தனியா வந்திருக்கா?'' என்று கேட்டான் நண்பன்.

''ப்ச்... தெரியலைடா...''

''என்னடா சொல்றே? உன்னோட ஃபியான்ஸி... தினமும் ஃபோன்ல பேசிக்கிறப்போ... இதை பத்தி உன்கிட்ட எதுவும் சொல்லலையாக்கும்?''

''இப்போ கதையே மாறிப் போச்சு. அப்புறமா சொல்றேன். இரு அவ யாரு கிட்டேயோ ஃபோன்ல பேசப் போறா... என்னன்னு கேட்போம்...''

காதைத் தீட்டிக் கொண்டு... இருவரும் ஒட்டுக் கேட்டனர்.

அடுத்து இவன் ரத்னாவின் ஃபோனுக்கு முயற்சித்தான். ரத்னா ஃபோனை எடுத்து ஊசிப் பட்டாசாய் பொரிந்து விட்டு பட்டென்று இணைப்பைத் துண்டித்ததும்... நாதனுக்கு முகத்திலடித்தாற் போலிருந்தது.

நண்பன் வேறு உற்றுப் பார்ப்பது அவனுக்கு அவமானத்தையும் கோபத்தையும் கொண்டு உள்ளம் எரிமலையாய் குமுறியது.

நண்பனுக்கு ஜாடை காட்டி... அப்படியே மரங்களின் மறைவில் அவளைப் பின் தொடர்ந்தனர்.



''உன் மீது சுமத்தப்பட்டுள்ள
குற்றத்திற்கு ஏதாவது கூற
விரும்புகிறாயா?''
''வளவளன்னு பேசாமல் தீர்ப்பு
சொல்லி ஜெயிலுக்கு அனுப்புங்க சாமி'
''மதிய சாப்பாடு நேரம்
நெருங்குது!''
- ஆர்.பிரகாசம், நல்லாலம்.



சிறிது தூரம் நடந்ததும்... ரத்னாவுக்கு மீண்டும் ஃபோன் வரவே... அவள் சட்டென்று நின்றாள்.

''அக்கா! என்னக்கா...? நான் தான் கொஞ்ச நேரங் கழிச்சு ஃபோன் பண்றேன்'னு சொன்னேன் இல்ல?'' சலித்துக் கொண்டாள்.

மறுமுனையில்...

''ரத்னா! ஏன்டி சலிச்சுக்கிறே...? அம்மா உன்கிட்டே பேசியே ஆகணுமாம்? பிடிவாதம் பிடிக்கிறா... ஒரே அழுகை... இந்தா அவங்க கிட்டே பேசு...''

''ரத்னா...'' செண்பகம் கூறலாய் பேசினாள்.

''படப்பை சாமியாமு என்ன... சொன்னாமு?'' தழுதழுத்தபடி கேட்டாள்.

அம்மாவின் குரலைக் கேட்டதும்... நெகிழ்ந்து போய் விட்டாள் ரத்னா.

படப்பை ஸ்வாமிஜி என்ன பரிகாரம் செய்யணும்னு விளக்கமா சொல்லிட்டாரு. நேரா கொல்லி மலைக்கு சென்று சுனையில பூக்கிற அரிய பூவை எடுத்து உன் தலையில வச்சு... உன்ன குணமாக்கிடறேன். சரியா? கவலைப்படாம இரு...''

நான் பத்திரமா வந்துடறேன்...''

மறுமுனையில் செண்பகம் விசும்பியழும் சப்தம் கேட்டது.

ரத்னாவுக்கு சங்கடமாய் இருந்தது.

ஒரு கணம் யோசித்து விட்டு... சுற்றும் முற்றும் ஒரு பார்வை பார்த்தாள்.

''அம்மா! அக்கா கிட்டே மூச்சு விடாதே...! பட்டுத்துணி முடிச்சுல கிடந்ததே...? அது சாதாரண கல்லு தான்னு... நான் சொல்லிட்டு வந்தேனே...? அது பொய்...''

''ம்...?''

''அது காணக் கிடைக்காத பொக்கிஷம்... நாக மாணிக்கமாம். பரண்லே நமக்கு காட்சி தந்தாரே? பாம்பு உடல் மனிதத் தலையோட ஒரு முனிவரு...? அவரு இதைத்தான் குறிப்பிட்டுப் பேசியிருக்காரு. வீணா பயப்படாதே? பத்திரமா நான் வந்துடறேன்... நேர்லே வந்து நிறைய அற்புத நிகழ்வுகளை... விரிவா சொல்றேன். நீ ரொம்ப பயந்துடுவியோனு தான்... அதை சாதாரண கல்லுன்னு சொல்லிட்டு வந்துட்டேன்... உன் கிட்டே இதுவரைக்கும் நா எதையும் மறைச்சதில்ல... அதான் இப்போ சொல்லிட்டேன்.

அவன் அதுவரை பேசியது... ஸ்பஷ்டமாய் காதில் விழவே... நாதனும், அவனது நண்பனும் திகைத்துப் போய்... ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

## 13

ரத்னா வேகமாய் நடந்து போய் கொண்டிருந்தாள்.

''என்னடா சொல்றா இவ?

''உன் காதுக்கும் நாக மாணிக்கம்னு தானே கேட்டுச்சு? அவ காண முடியாத பொக்கிஷம்கிறா... பரண்லே முனிவரு காட்சி தந்தாருங்கிறா... அதுவும் மனிதத்தலை, பாம்பு உடலோட...''

''எனக்கும் தான்... ஒரு சின்னப் பிரச்சினையால... பேசின படி நடக்க இருந்த கல்யாணம் நின்னுபோச்சுடா...'' என்றபடி தகுந்த இடைவெளிவிட்டு... மெல்ல நடக்கலாயினர்.

''டேய்... ஒரு வேளை... கல்யாணம் நின்னு போயிடுச்சுங்கிற கவலையில... இவளுக்கு மூளை பிசகிப் போச்சோ?''

''ப்ச்! இவ ராங்கி பிடிச்சவடா... கல்யாணம் நின்னு போனதுக்கு



இவ நிச்சயமா ரொம்ப ரொம்ப சந்தோஷப் பட்டவன்டா... இவளாவது கவலைப் படறதாவது...?''

''கொல்லிமலைக்கு கிளம்பறேன்'னு சொல்றாளே?

படப்பை சாமியார் சொன்னபடி ஏதோ பரிகாரம் பண்ணிட்டு வர்றேங்கிறா... சுனையில பூக்கிற அரிய பூவைக் கொண்டாந்து தலை மேல வச்சா குணமாயிடும்கிறா...

டேய்... எனக்கு அவ முகத்தைப் பார்த்தா... பொய் சொல்றவ மாதிரி தெரியலைடா... அவ பேசினதைக் கேட்டா... யாராலும் நம்ப முடியாது தான்...

ஆனா அதே சமயத்துல அவ பொய் சொல்லலைன்னு எனக்கு நிச்சயமா தோணுதுடா...

என்ன தான் பண்றாள்? என்ன நடக்குது?'ன்னு... ஃபாலோ பண்ணிப் பார்த்துடலாமே...?''

''பார்த்து... என்ன செய்யப் போறே...? அவ உனக்கு கிடைக்கப் போறதில்லைன்னு முடிவாகிப் போச்சல்ல?

ஹூக் மாதிரி எதுக்கு ஃபாலோ பண்றே?''

நண்பன் எரிச்சலாய் கேட்டான்.

''என்னடா இப்படிப் பேசறே...? நாக மாணிக்கம் இருக்கிறது உண்மைன்னு தெரிஞ்சா... நாம அதை அபேஸ் பண்ணிக்கலாம் இல்லியா?

ஆம்பளைத் துணை இல்லாத வீடு... ரெண்டே பொம்பளைங்க தான்... ரெண்டு பேத்து மென்னியையும் முறிச்சுட்டு... அதை எடுத்துட்டு வந்துடலாமே...? வித்து வர்ற பணத்தை நாம 'ஷேர்' பண்ணிப்போம்''

''அப்போ... வா... இவ வீட்டுக்கே போகலாம்...''

''வேணாம். இவ பின்னாடி கொல்லிமலைக்கே போகலாம்...''

''ஏன் அவ்ளோ தூரம் போகணும்?''

''தனியா கிளம்பி வந்திருக்கா... காணக்கிடைக்காத பொக்கிஷத்தைப் எடுத்துட்டு வந்திருப்பாளா? பாதுகாப்பு இல்ல... களவு போயிடும்னு பயந்து... வீட்டுக்குள்ளேயே எங்கேயாச்சும் ஒளிச்சு வச்சிருப்பான்னு... நா நெனக்கிறேன்...

## கடவுள்

சோதனையும்,
வேதனையும்
நிறைந்த
காலங்களில்
மனிதன் மனதுருகி
தேடும் பொருள்!
மகிழ்ச்சியும்
கொண்டாட்டமும்
நிறைந்த நாட்களில்
ஞாபக மறதியில்
மனிதன் தொலைக்கும்
பொருள்!

- ஸ்ரீப்ரியா,
தூத்துக்குடி

அது எங்கே இருந்தா என்ன? நாம்ப இவனை ஃபாலோ பண்ணப் போறோம் இல்ல...? எப்படியும் கொல்லிமலையில நமக்கு வெட்ட வெளிச்சமாயிடும்.

கையோட இவ எடுத்துட்டு வந்திருந்தா... நமக்கு ரொம்ப நல்லதா போச்சு... இல்லைன்னா... இப்போ என்ன?

இவ கதையை முடிச்ச கையோட... இவ வீட்டுக்குப் போயி அதைக் கண்டுபிடிச்சு எடுத்துக்கப் போறோம்.

இவன் கிட்ட பொக்கிஷம் இருந்தா... நமக்கு வேலை மிச்சம்... இல்லைன்னா அநாவசியமா இவனோட அம்மாவையும், அக்காவையும் போட்டுத் தள்ள வேண்டியிருக்கும்...''

''நாக மாணிக்கம் கிடைக்குதுன்னா... நாம்ப என்ன வேண்டுமானாலும் செய்யலாம் தப்பே இல்ல...''

டேய்... ரொம்ப தூரத்துக்குப் போயிட்டான்டா... நாம்ப அவனை மிஸ் பண்ணிடக் கூடாது வேகமாவா...''

''எப்படியும் அவ பஸ் ஸ்டாப்புல போய் தான் நிப்பா...

''அவ ஏறப் போற பஸ்லேல தான்... நாம்பளும் ஏறணும். அவ கண்ணுல படாம ஃபாலோ பண்ணினா... நல்லது...''

''பஸ்ஸுக்காக பெரிய கூட்டமே காத்துக்கிடக்கும். நாம்ப மறைவா நின்னுக்கலாம். கவலைப்படாதே மச்சி! அவ கண்ணுல படாம தந்திரமா ஃபாலோ பண்ணிடலாம்!''

**14**

காலையில் நாமக்கல்லின் இறங்கியதும்... சிறிதும் தாமதிக்காமல் கொல்லி மலைக்குச் செல்லும் பேருந்தில் ஏறிக் கொண்டான்.



காலையில் நாமக்கல்லில் இறங்கியதும்.... சிறிதும் தாமதிக்காமல் கொல்லி மலைக்குச் செல்லும் பேருந்தில் ஏறிக் கொண்டான்.

முதுகுப்புறம் குறுகுறுப்பாய் ஒரு உணர்வு!

'யாரோ நம்மை பின் தொடர்கிறார்கள்' என்று நூதனமாய் மனம் எச்சரித்தது.

'யார் என்னைப் பின் தொடரப் போறாங்க?

என்ன காரணத்துக்காக என்னை தொடரணும்?

அப்படியெல்லாம் ஒண்ணுமிருக்காது. அவனே சமாதானம் செய்து கொண்டான்.

கிட்டத்தட்ட ஒரு மணிநேரத்திற்குப் பின்பு, கொல்லிமலையில் அந்த பஸ் சென்றடைந்து 'புஸ்' என்று பெருமூச்சு விட்டு விட்டு அடங்கியது.

பஸ்ஸிலிருந்து இறங்கியவனை... சில்லென்ற மலைக்காற்று இதமாய் தழுவியது.

அவன் இதுவரை எந்தப் மலைப்பிரதேசத்திற்கும் சென்றதே இல்லை. இதுபோன்ற இயற்கை வளப்பு கோலோச்சும் வனந்தரத்திற்கும் எஸ்டேட்களுக்கும் செல்ல வேண்டும் என்று... பல காலமாய் ஏங்கித் தவித்தவன் ரத்னா.

அதற்காக வாய்ப்போ வசதியோ... அவனுக்கு வாய்த்ததில்லை... மலைக்காற்றில் படபடத்த சேலைத் தலைப்பை இழுத்து இடுப்பில் செருகிக் கொண்டான்.

சுற்றும் முற்றும் பார்வையை சுழலவிட்டான்.

சிறிது தூரம் நடந்து... சாலையோரத்தில் இருந்த பூக்கடையில் சென்று விசாரித்தான்.

''இங்கே ஆகாய கங்கை அருவி இருக்கு... ஆயிரத்து ஐம்பது படிக்கட்டுகள் இறங்கினா அருவியைப் பார்க்கலாம்.... குளிக்கலாம்...''

''ஆயிரத்து ஐம்பது படிக்கட்டுக்குகள் இறங்கணுமா? ஓ.... அதுக்கு வேற வழி கிடையாதா?''

''ஊகும் ஒரே வழிதான்...''

''தகவல் சொன்னதுக்கு நன்றி ஐயா...''

சிறிது தூரம் நடந்ததும்... 'ஆகாய கங்கை அருவிக்குச் செல்லும் வழி' என்று அம்புக்குறி போட்ட பெரிய பலகை கண்ணில் பட்டது.

அந்தப் பாதையில் வேகமாய் நடந்து... படிக்கட்டுகளில் இறங்க ஆரம்பித்தாள்.

அகலமான படிக்கட்டுகள். ஹோவென்று இரைச்சல் இருந்த அருவித் தண்ணீரில் பேரிரைச்சல் கேட்டது.

மனதில் உத்வேகம் இருந்ததால்... நின்று நிதானிக்காமல் மளமளவென்று படிகளில் இறங்கினாள்.

ஆகாயத்திலிருந்து வெள்ளியை உருக்கி வார்த்தாற்போல் அவ்வளவு உயரத்திலிருந்து தண்ணீர் பரவசமாய் கொட்டியதைப் பார்த்து பிரமித்துப் போய்விட்டாள்.

இருபதடி தூரத்தில் இவள் நின்றிருந்தாலும்... அருவி விழும் வேகத்திற்கு வெள்ளை புகையாய் கிளம்பி... நீர்த்துளிகள் பன்னீராய் இவள் மீது தெளித்து விழுந்த அழகில்... லயித்துப் போய் நின்றிருந்தாள். அருவியில் குளித்து முடித்து பெண்கள் உடைமாற்றும் பகுதிக்குச் சென்றாள்.

சில நிமிடங்களில் வேறு புடவையை மாற்றிக் கொண்டு தயாராகி வெளிப்பட்டாள் ரத்னா.

மூச்சிரைக்க ஆயிரத்து ஐம்பது படிகள் கடந்து மேலே வந்தாள்.

விரித்த அடர்ந்த கூந்தலை நுனியில் முடிச்சிட்டுக் கொண்டு சற்று நிதானித்தாள்.

'மலையின் மையப் பகுதிக்குப் போகும்படி உத்தரவு வந்ததே? எதிரில் பெரிய மலையொன்று தென்படுகிறது...

மலைப்பாதை எந்தப் பக்கம் இருக்கிறது என்று தெரியவில்லையே?

இப்போதே போய் விடலாம்? இன்று பவுர்ணமி ஆயிற்றே... முன்கூட்டியே போய் விடலாம். அதில் தப்பில்லை. எந்த விஷயத்திலும் தாமதம் தான் செய்யக் கூடாது மலையின் அருகில் சென்று பார்க்கலாம்.

எங்காவது பாதை தென்படுமே?

இதற்கு மேல் யாரிடமும் எதையும் விசாரிக்கக் கூடாது.

அழகான கன்னிப் பெண் தன்னந்தனியாக காட்டு மலைப்பாதையில்



போவதை பார்த்து விட்டு எவராவது பின் தொடர்ந்தால் ஆபத்தாயிற்றே?

பலவும் எண்ணியபடி விடுவிடென்று நடந்தாள் ரத்னா.

குறுகலான மலைப்பாதை ஒன்று கண்ணில் பட்டதும் நீண்ட பெருமூச்செறிந்தபடி நடக்கலானாள்.

இருபுறமும் மரங்களும் புதர்களும் கொடிகளும் அடர்ந்திருந்தன. மரங்களின் கிளைகள் இருபுறமும் வளைந்து பிணைந்து இருந்ததால் காலை நேரத்தில் கூட வெளிச்சம் குறைந்தே காணப்பட்டது. வெயில் படாதபடி பச்சை வண்ணத்தில் பந்தல் போட்டாற் போலிருந்தது.

குளுமை மிகுந்திருந்தது. மேலே செல்லச் செல்ல காற்றில் ஈரப்பதம் அடர்ந்திருந்தது.

பின்னால் யாரோ நடந்து வரும் ஓசை கேட்டது.

உதிர்ந்து காய்ந்த, சருகுகள் நொறுங்கும் சப்தம் பலமாய் கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

வெண்ணிற ஆடை அணிந்து எழுபது வயதான முதியவர் நிதானமாய் நடந்து வந்தார். ஆஜானபாகுவாய் இருந்தார்.

கையில் ஒரு ஊன்றுகோலை வைத்திருந்தார்.

இவள் திரும்பிப் பார்த்ததும்... வெகு நாட்கள் பழகியவரைப் போன்று முறுவலித்தார்.

''எங்க தாயீ போறே?''

''மலையோட மையப் பகுதிக்குப் போறேன் ஐயா.... ரெண்டு மூணு கிளைப் பாதைகள் பிரியுதே? மையப் பகுதிக்கு எந்தப் பாதையில் போகணும்?''

''இப்போ போறியே.... இதே பாதையில' அங்கிட்டும் இங்கிட்டும் திரும்பாம... நேரா போ தாயீ!'' என்றபடி ஒரு புதரிலிருந்த இலைகளை உருவினார்.

அப்படியே வாயில் போட்டு மெல்ல ஆரம்பித்தார்.

ரத்னா திகைத்துப் விட்டு, ''இலைகளைப் பறிச்சு சாப்பிடறீங்களே?'' இந்த இலைகள் என்ன பலனைத் தரும்?'' என்று கேட்டாள்.

''இது ஒரு மூலிகை தானம்மா... சாப்பிட்டா.... இன்னிக்கு முழுக்க பசியே எடுக்காதாக்கும்....

பசி மட்டுமில்ல.... தாகமும் எடுக்காது.... இதோ... இந்தப் பழம் இருக்கு பாரு... இதை சாப்பிட்டா... வயிறு திம்முனு விருந்துச் சாப்பாட்டை சாப்பிட்ட மாதிரி ஆயிடும்....''

''இந்த மூலிகைக்கு பேர் என்ன ஐயா? அதிசயமான மூலிகையா இருக்கே?''

ஆச்சரியப்பட்ட படி அவனும் இலைகளைப் பறித்து உண்ணத் தொடங்கினான்.

அருவியில் குளித்ததில் பயங்கர பசி அவளுக்கு.

அதுவும் ஆயிரத்து ஐம்பது படிக்கட்டுகளில் இறங்கி ஏறியதில் பசி குடலை முறுக்கிப் போட்டது.

நா வரண்டு தண்ணீர் தாகம் வேறு எடுத்துக் கொண்டிருந்தது.

''என்ன பேரா இருந்தா என்னம்மா? பேர் எனக்கு மறந்து போச்சு... மூலிகைகளை ரொம்ப சரியா அடையாளம் கண்டுக்கத் தெரியும்.

அவர் கூறியது வாஸ்தவம்தான்.

ரத்னாவுக்கு பசி கப்பென்று அடங்கிவிட்டிருந்தது. அதசயத்தபடி... அந்த இலைகளை கையளவுக்கு உருவி ஹேண்ட் பேக்கில் போட்டுக் கொண்டாள்.

மீண்டும் காய்ந்த சருகுகள் இலைகள் நொறுங்கும் சப்தம் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

வாட்ட சாட்டமான இளைஞன்... முதுகில் டிராவல் பேக்கை ஸ்டைலாக மாட்டியபடி வந்து கொண்டிருந்தான்.

முகத்தில் பணக்காரக் களை தெரிந்தது.

வசீகரமான முகம்... பெரியவரைப் பார்த்ததும் மந்தகாசமாய் சிரித்தான்.

''ஐயா வணக்கம்! என்னை ஞாபகமிருக்கா? சாரி... நான் தப்பா கேட்டுட்டேன்.... உங்களுக்கு சேலத்துக்குப் பக்கத்துல ஒரு புராதானமான கோவிலை நான் ஆய்வு செய்ய வந்தப்போ.... நீங்க ஒரு மரத்தடியில சிரசாசனம் பண்ணிட்டிருந்தீங்க? பதஞ்சலி முனிவரைப் பத்தி, எனக்கு சொன்னவர் நீங்க... இன்னிக்குப் பவுர்ணமி... நீங்க சொன்னபடியே அவரை தரிசிக்க நான் கிளம்பி வந்துட்டேன். சத்தியமா இங்க உங்களை மறுபடியும் சந்திப்பேன்'னு நான் நெனச்சே பார்க்கலை.



நான் ஒரு முட்டாள். எனக்குச் சொல்லி என்னை வர வச்ச நீங்க... ஒவ்வொரு பவுர்ணமிக்கும் தரிசனத்துக்கு வராமலா இருப்பீங்க.

உங்களுக்கு... உங்க உடம்புக்கு ஊன்றுகோலே தேவை இல்லையே...?''

''உன்னோட அம்மா அப்பாவை சமாதானப்படுத்திட்டு இங்க வர்றதுக்கு நீ படாதபாடு பட்டிருப்பியே ரகு?'' என்று கேட்டார் பெரியவர்.

''ஐயா! என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க?'' என்றபடி அவரது பாதங்களை தொட்டுப் பணிந்தான்.

பெரியவரின் முதுகுப் பக்கத்திலிருந்து வியப்புடன் விழிகள் விரிய எட்டிப் பார்த்தாள் ரத்னா.



1932ல் நடந்த ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் ஒரே ஆட்டத்தில் இந்தியாவைச் சேர்ந்த 'ரூப்சிங்' என்பவர் ஒருவரே 12 கோல்கள் போட்டார்.

சி.விஜயாம்பாள், கிருஷ்ணகிரி

## ←←←15→→→

''ஆயுஷ்மான் பவ... விவாகப் பிராப்தம் சீக்கிரமே உனக்கு கிட்டட்டும்...''

''அவனது உச்சந்தலை தொட்டு ஆசீர்வதித்தார் பெரியவர். 'பெரியவர் ஒரு மகானா? வந்த இளைஞர், பெரியவரைப் புகழ்ந்து தள்ளுகிறாரே?

நான் இப்போது ஒரு மகானின் அருகிலா இருக்கிறேன்?

ஆச்சரியம் எல்லை கடந்தது.

பெரியவரின் பாதம் தொட்டுப் பணிந்து எழுந்து நின்ற ரகு... அப்போது தான் ரத்னாவைப் பார்த்தான்.

நான்கு விழிகளும் மோதிக் கொண்டன.

வனாந்தரத்தில் மலைப் பாதையில்... வன தேவதையைப் போன்ற பேரழகுடன் ஒரு பெண்ணை சந்திப்போம்' என்று ரகு கனவிலும் கருதவில்லை தான்...

பார்த்த மாத்திரத்திலேயே... கள்ளம் கபடத்தின் சாயல்படியாத... மாசு மருவற்ற வட்ட முகம்... அவனது மனதில் பதிந்து விட்டது.

'இவள்... இவள் தான்... இவள்தான் என் வருங்கால மனைவி' உள் மனம் அறுதியிட்டு உறுதி கூறியது.

உள்ளுக்குள் உற்சாகம் ஊற்றெடுத்தது.

நெஞ்சினுள் ஐஸ் கிரீம் மழை சிலுசிலுவென வழிந்தாற் போலிருந்தது.

''என்ன ரகு அப்படிப் பார்க்கிறே? இந்தப் பொண்ணு மலையோட மையப் பகுதிக்குப் போறா...

கிட்டத்தட்ட நீயும் இவளும் ஒரே பாதையில தான் பயணிக்கப் போறீங்க...'' என்று கூறி ரத்னாவைத் திரும்பிப் பார்த்தார் பெரியவர்.

''உன் பேர் ரத்னா தானேம்மா?''

ரத்னா அரண்டு விட்டாள். அவளுக்கு மெய் சிலிர்த்தது.

''ஐயா... இந்த அபலைக்கு கருணை காட்டுங்கய்யா....''

என்றபடி காலில் நமஸ்கரித்தாள்.

''எழுந்திரும்மா!'' சௌபாக்கியவதியா இரும்மா...''

''ஐயா... கொல்லி மலைக்குப் போ... உனக்கு வேண்டிய விளக்கம் தன்னால கிடைக்கும்'னு பட்டப்பை ஸ்வாமிஜி சொன்னாரு.

எப்படி கிடைக்கும்? எங்கே கிடைக்கும்?னு... நானும் பரிதவிச்சேன்.

ஒரு மகானையே இவ்வளோ சீக்கிரத்துல நேரில் பார்க்கிற பாக்கியம் கிடைக்கும்னு... நான் எதிர்பார்க்கவே இல்ல.

தயவு செய்து சொல்லுங்கய்யா... பரண்லே காட்சி தந்தாரே? வித்தியாசமா பாம்பு உடல் மனிதத் தலையோட ஒரு முனிவரு'' அவர் யாருன்னு சொல்லுங்க?''

''கண்ணீர் மல்க தழுதழுத்தபடி கேட்டாள் ரத்னா.

''இதோ இந்த ரகு... அவரைத் தான் பார்க்க வந்திருக்கான். நீ



உன்னோட வீட்டுப் பரணிலேயே அவரை தரிசனம் பண்ணிட்டே... நீ பாக்கியசாலி ரத்னா!''

''அப்படின்னா? அவரு பதஞ்சலி சித்தரா ஐயா?''

''அவரே தானம்மா....''

''உண்மையிலேயே நான் பெரிய பாக்கியசாலி தான் ஐயா! பதஞ்சலி சித்தர் அப்புறமா பட்டப்பை ஸ்வாமிஜி.... இப்போ நீங்க...

ஒரு சித்தர் ஜீவசமாதி அடைஞ்சு அருபமா வந்த ஸ்வாமி, ஒரு 'மகான்'னு... மூணு பேரை ரெண்டு நாள்லே பாத்திருக்கேன். இந்த பாக்கியம் வேற யாருக்கு கிடைக்கும்?''

''தாரையாக கண்ணீர் வடிய சிலாகித்துப் பேசினாள் ரத்னா. இதைக் கேட்டுக் கொண்டிருந்த ரகுவிற்கு... உடம்பெல்லாம் புல்லரித்தது.

போன ஜென்மத்தில் இவன் நிறைய புண்ணியம் செய்து இருக்கிறான்.

கொடுத்து வைத்த தேவதை இவள்! இவளைக் கைப்பிடிக்கும் பாக்கியம் கிடைத்தால்... உலகத்திலேயே நான்தான் அதிர்ஷ்ட சாலி...' என்ற எண்ணம் அவனது மனதிற்குள் வரி வரியாய் ஓடியது.

அதை வாசித்துப் பார்த்த தினுசில்... 'நீ அதிர்ஷ்டசாலியே தான் ரகு'' என்று கூறிவிட்டு அர்த்தப் புஷ்டியுடன் சிரித்தார் பெரியவர். ரகு புரிந்து கொண்டான்.

தவமியற்றாமல் பெரிய வரம் கிடைத்து விட்டாற் போன்று உள்ளூர மகிழ்ச்சி நீரூற்று போல் பொங்கி உயர்ந்தது.

''நன்றி ஐயா'' பெரியவரின் கரத்தைப் பற்றி தனது கண்களில் ஒற்றிக் கொண்டான்.

''ஐயா! என்னோட முன்னோர்கள் என்ன பாவம் செய்தாங்க? மிகப் பெரிய பாவத்தை செய்திருக்காங்க? யாரு அவங்களால பாதிக்கப்பட்டாங்க?ன்னு... தயவு செஞ்சு சொல்லுங்கய்யா...

அவங்க செஞ்ச பாவத்தால தலைமுறை தலைமுறையா எங்க வம்சத்து பெண்கள் பூவையும் பொட்டையும் இழந்து பட்ட மரமா நின்னிருக்காங்க. யாரு குடுத்த சாபம் இது? எங்க வசம்சத்துக்கு விமோசனம் கிடைக்கணும். நீங்க கருணை காட்டுங்கய்யா...

பரிகாரமாக ரத்தம் சிந்த மட்டுமில்ல... உயிரைக் கூட தர்றதுக்கு



இந்தியாவின் மிகப் பெரிய ரோஜா தோட்டம், சண்டிகாரில் உள்ளது. இங்குள்ள ரோஜா தோட்டத்தில் 1600க்கு மேற்பட்ட அழகு மிகுந்த ரோஜாப்பு வகைகளுடன் 36 ஆயிரம் ரோஜா செடிகள் இருக்கின்றன.

டி.பச்சமுத்து, கிருஷ்ணகிரி.

நான் தயாரா இருக்கேன்.

இதோ... இந்த நாக மாணிக்கத்தை... 'சேர்க்க வேண்டிய இடத்துல சேர்த்துடு'ன்னு உத்தரவு வந்ததே?

எங்க சேர்க்கணும்? எப்படி சேர்க்கணும்?னு சொல்லுங்க. சகலத்துக்கும் எனக்கு துணையா இருந்து உதவுங்க ஐயா!

பக்கவாதம் வந்து படுத்துக்கிடக்கிற அம்மாவுடைய தலையில... சுனையில பூக்கிற அரிய புஷ்பத்தை வச்சா குணமாயிடுவாங்கன்னு அசரீரியா சொன்னாங்க?

சுனை எங்கே இருக்கு? இந்த அபலைக்கு நீங்க தயை புரியணும்...''

அழுதபடியே கரங்களைக் கூப்பிய படியே வேண்டினாள் ரத்னா.

ரகு அவளை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் ஹேண்ட் பேக்கிலிருந்து பட்டுத் துணி முடிச்சை எடுத்து அவிழ்த்து.... நாகமாணிக்கத்தை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டு... பெரியவரிடம் பவ்யமாய் நீட்டினாள்.

பெரியவர் அதை வாங்கிக் கொண்டு... சில கணங்கள் நாக மாணிக்கத்தை ஊன்றிப் பார்த்தார்.

''இதுக்கு ஆசைப்பட்டுத் தான்... மிகப் பெரிய பாவத்தைச் செய்துட்டாங்க...''

''ஐயா... தயவு செய்து விரிவா சொல்லுங்க ஐயா''

''இங்க ரொம்ப நேரம் நிக்க வேண்டாம். மலையோட மையப் பகுதிக்குப் போயிடலாம்...''

''பெரிய மலையா இருக்கே... மேலே போயி... அங்க மையப் பகுதிக்குப் போகணுன்னா... பல மணி நேரம் பிடிக்கும் போலிருக்கே...''

அண்ணாந்து பார்த்தபடி கூறினான் ரகு.

அந்தக் கவலை என்னத்துக்கு... இந்த வேர் இருக்கிறப்போ? கையிலிருந்த ஊன்றுகோலை ஒடிப்பது போல் வைத்து இரு கைகளாலும் பிடித்து... இரண்டாய் பிரித்தார்.

சரி பாகமாய் இரண்டு குழல் போன்று பிரிந்ததும்... ஒன்றின் உள்ளிருந்து எதையோ உருவினார் பெரியவர்.

நீளமாய் ஒல்லியாய் ஒரு வேர்.

ரகுவும், ரத்னாவும் அதை உற்றுப் பார்த்த போது...

சற்று தூரத்தில்...

ஏழெட்டு பேர் அடங்கிய கும்பல் ஒன்று கத்தி, ரகளை செய்தபடியே மலைப் பாதையில் ஏறி வந்து கொண்டிருந்தனர். வனாந்தரத்தின் அமைதியையே கெடுப்பது போன்று இருந்தது.

அப்படியொரு நாராசமான சப்தம்!

மூவரும் சப்தம் வந்த திக்கில்... திரும்பிப் பார்த்தனர்.

''இனிமே இங்கே ஒரு கணம் கூடத் தாமதிக்கக் கூடாது'' என்றார் பெரியவர்.

''சரிங்க ஐயா! அவங்க கண்ணுல படாம வேகமா போயிடணும்... அவ்வளவுதானே? போலாம் வாங்க?'' என்றான் ரகு.

''ஊகூம்... பாவம்! ரத்னாவால முடியாது... இந்தாங்க... இதை ரெண்டு பேரும் முகர்ந்து பாருங்க...''

''ஏன்? எதற்கு?'' என்று எந்தக் கேள்வியும் கேட்காமல் இருவரும் உடனடியாக இழுப்படிந்தனர்.

ரத்னாவுக்கு அதை முகர்ந்து பார்த்தது தான் தெரியும்... மறுகணம் 'என்ன நடக்கிறது?' என்றே தெரியவில்லை.

கண்ணை விழித்து பார்த்தபோது... அவர்கள் அந்த இடத்தில் மலையின் மையப் பகுதிக்கு வந்திருந்தார்கள். பெரியவர் ஒரு

உயரமான பாறையில் அமர்ந்திருந்தார். எப்படி கடந்தோம்?' என்று தெரியாமல்... இருவரும் அலங்க மலங்க விழித்தனர். ஆனால், பெரியவரோ ஒன்றுமே நடக்காதது போன்று முக பாவனையுடன் வெகு சாதாரணமாய் இருந்தார்.

வெகுநேரம் நிம்மதியாய் தூங்கி எழுந்ததைப் போன்ற உணர்வு... இருவருக்குமே ஏற்பட்டது நிஜம்...! இவர்கள் இருவரும் இடைவெளி விட்டு காட்டுப்புல் தரையில் அமர்ந்திருந்தனர்.

''கத்தி கலாட்டா பண்ணிக்கிட்டே ஏறி வந்தாங்களே? அவங்க யாரு?'' கேட்டான் ரகு.

''யானை தந்தம், மான்கொம்பு, புலித்தோல் இவைகளுக்காக கொஞ்சம் கூட இரக்கப்படாம... மிருகங்களை வதை பண்றவங்க.

மிருகங்களை மட்டுமில்ல... மனுஷங்களைக் கண்டாலும் விடறதில்ல... பணத்துக்காகவும் நகைக்காகவும் போட்டுத்தள்ள தயங்காத கும்பல் அது...'

துஷ்டர்களைக் கண்டால்... தூர விலகிடறது நல்லது இல்லையா ரகு?''

''என்னால இதை ஏத்துக்க முடியலைங்க ஐயா. சட்டத்துல சிக்காமல் இவங்க தப்பிச்சுடறாங்களே?''

''நீங்க மகான் ஆச்சே? நீங்க தண்டனை தரலாமே? நீங்களே விலகி வந்தா எப்படி?

அப்புறம்... யாரு தான் அவங்களை தண்டிப்பாங்களாம்? அவங்க செய்யற பாவத்துக்கு கூலி தர வேணாமா?''

படபடத்தான் ரகு.

''கூலி தர்றதுக்கு இது நேரமில்ல ரகு! தண்டனை தரலாம். எப்போ தரணுமோ அப்போ தான் தரணும். அதுக்கு கால நேரம் இருக்கு. அதே சமயத்துல இன்னும் ரெண்டு பேர் வந்து சேர வேண்டியிருக்கு...''

பெரியவரின் இதழ்களில் மர்மப் புன்னகை!

ரத்னா பிரமித்துப் போய் சுற்றும் முற்றும் பார்த்தார்.

''என்னம்மா பார்க்கிறே? நாம்ம மையப் பகுதிக்கு வந்தாச்சு...''

''ரத்னா எதையோ கேட்பதற்கு வாயெடுத்தாள்... அந்த தருணத்தில்...

திணமாய் யாரோ அழும் சப்தம் கேட்டது. அதுவும்...



ஒரு பெண்ணின் அழுகை ஏனோ தெரியவில்லை...

ரத்னாவுக்கு திக்கென்றிருந்தது.

# ←←←16→→→

இனம் புரியா பதற்றத்துடன் நாலாபுறமும் பார்வையை சுழற்றினாள் ரத்னா.

அழுகைச் சப்தம் திணமாய்... தூரத்திலிருந்து கேட்டது.

''ஐயா! யாரோ ஒரு பொண்ணு அழற சப்தம் கேட்குதே... எனக்கு உடம்பெல்லாம் பதறுது....''

''அந்தப் பொண்ணுக்கு உதவுங்க ஐயா''ன்னு கேட்க வர்றியா ரத்னா?''

''ஆமாங்க ஐயா!''

''அந்தப் பொண்ணோட அழுகைக்கு... உன் வம்சத்தார் தான் காரணம்.... உன்னோட கொள்ளு தாத்தா மார்க்கண்டேய பூபதியால தான்... இவ இப்படி கதறிட்டு இருக்கா...''

ரத்னாவுக்கு பக்கென்றிருந்தது.

''ஐ...யா! என்ன ஐயா சொல்றீங்க?'' தயங்கி நிறுத்தினாள். ''என்ன ரத்னா? தயங்காம கேட்க வேண்டியதைக் கேளும்மா''

''இல்ல... என்னோட கொள்ளு தாத்தாவால்... இந்தப் பொண்ணு பாதிக்கப்பட்டாளா?

கிட்டத்தட்ட மூணு தலைமுறை முடிஞ்சு போச்சு?

எங்க கொள்ளு தாத்தாவால பாதிக்கப்பட்ட பொண்ணு... இன்னுமா உயிரோட இருக்க முடியும்?

இது எப்படி சாத்தியமாகும் ஐயா''

''சாத்தியம்தான்... நாக மாணிக்கத்தை என்கிட்டே கொடுத்தேயில்ல?

அது உங்க கொள்ளு தாத்தாவாலா தான் அபகரிக்கப்பட்டது. அது இருக்கிறப்போ... இந்தப் பொண்ணு இருக்கிறதுல என்ன ஆச்சரியம்?''

கடகடவென்று தலையைச் சரித்து நகைத்தார் பெரியவர். இருவரையும் மவுனமாக ஊன்றிப் பார்த்தார். அந்த அழுகை அதிகரித்து கிட்டத்தட்ட கதறலாய் இவர்களது செவிகளைப் பதம் பார்த்தது.

''அவ... மனிதகுலத்தில் பிறந்திருந்தா... எப்பவோ அவ காலம் முடிஞ்சிருக்கும்...

ஆனா... இவ... மனித குலத்தைச் சேர்ந்தவ இல்லையே?''

''இப்படித்தான் தினமும் கதறிட்டு இருக்காங்களா?

ஐயோ.... எனக்கு வேதனையா இருக்கே? அடி வயிறு பிசையுதே? இந்தப் பாவத்தை எந்தக் கடல்லே கரைக்கிறது?''

பஹ்ரைன் நாட்டின் தேசிய கீதம் வார்த்தைகளால் பாடப்படாமல் இசையில் அமைக்கப் பட்டிருக்கின்றன.
டி.பச்சமுத்து, கிருஷ்ணகிரி.

''ரத்னாவுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. அவளது இளைய உள்ளத்தைப் பார்த்து... நெகிழ்ந்து போனான் ரகு.

''ரத்னா! அழாதே! எல்லாத்துக்கும் இன்னிக்கு விமோசனம் கிடைச்சுடுமில்ல? தைரியமா இரு! கண்ணீரைத் துடை...!''

அவனையும் அறியாமல் வெகு உரிமையாய் அவளுக்கு ஆறுதல் மொழி பகிர்ந்தான் ரகு.

சற்று நிதானித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டவள்...

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

''ஐயோ! அவங்க மனிதப் பெண்ணில்லைன்னா... நாக குலத்தைச் சேர்ந்த பெண்ணா?''

மெல்லிய குரலில் கேட்டாள் ரத்னா.

நீ கேட்டது சரிதான். அவ நாக வம்சத்தைச் சேர்ந்தவள்தான்.

உங்க கொள்ளு தாத்தா மார்க்கண்டேய பூபதி குதிரையில வனாந்திரத்துக்கு வேட்டையாட அடிக்கடி வரக் கூடியவரு...

நாகமாணிக்கம் விலைமதிப்பில்லாத பொக்கிஷம்னு அவர் கேள்விப்பட்டிருக்காரு....

அவரு கண்ணுல ஒரு பாம்பு பட்டிருக்கு... நாகமாணிக்கத்தை கக்கிட்டு... அந்த வெளிச்சத்துல அது இரை தேடிட்டு இருந்திருக்கு.



அதை சாதாரண பாம்புன்னு உங்க தாத்தா தப்புக்கணக்கு போட்டுட்டாரு.

அது அரிய சக்தி வாய்ந்த பாம்பு... நாக லோகத்தைச் சேர்ந்த நினைத்த நேரத்துல மனித வடிவெடுக்கக் கூடிய பாம்பு... அதோட பேரு... நாகேந்திரன். இந்த நாகேந்திரனோட காதலி தான் நாகஜோதி.... அழகான நாகதேவதை... ரெண்டு பேரும் உயிருக்குயிரா நேசிச்சவங்க... இந்த நாக லோகத்தைச் சார்ந்த பாம்புகள் மற்ற பாம்புகளை விட வித்தியாசமானவை.

யுகக் கணக்குல உயிர் வாழும் தன்மை கொண்டவை. பல நாட்கள் தந்திரமா ஒளிஞ்சு நின்னு கவனிச்சு, ஒரு அமாவாசை அன்னிக்கு... நாகமாணிக்கத்தை நாகேந்திரன் பாம்பு வடிவில இருக்கும் போது உமிழ்ந்துட்டு நகரப் போனப்போ... மார்க்கண்டேய

LIC
LIC OF INDIA
GET REGULAR MONTHLY INCOME
- Bright career
- endless income
- Value added work
- Full time/ part Time
- All Segment Persons can join as an advisor
- No Risk - No Investment
- Convert Your Contacts in to Huge Regular monthly income.



Contact:
K. MOHANRAJ
DEVELOP MENT OFFICER
98840 27940, Mail: k.mohanrajdevpt@g-mail.com

பூபதி... நாகமாணிக்கத்தை எடுத்துக்கிட்டாரு....

பெரிய கத்தியால பாம்பை ரெண்டு துண்டா வெட்டிட்டாரு.

பொதுவா... இந்த மாதிரி பாம்புகள் நாகமாணிக்கத்தைக் கக்கிட்டா... சக்தி முழுவதும் இழந்துடும். ஆணுக்கு மட்டும் நாகமாணிக்கம் இருக்கும்.

அந்த தருணத்துல... நாக ஜோதி தன்னோட காதலனோட உடம்பு ரெண்டு துண்டாகி துடி துடிக்கிறதைப் பார்த்துட்டு... மனித ரூபத்துல மார்க்கண்டேய பூபதி கிட்டே மன்றாடினா... நாகமாணிக்கத்தை திரும்பித் தந்துடு... என்னோட காதலனுக்கு உயிர்ப்பிச்சை குடுன்னு... கெஞ்சினா...

ஆனா மார்க்கண்டேய பூபதி குதிரை மேல ஏறிட்டு வேகமா போயிட்டாரு... எங்கே? இந்தப் பெண், பாம்பு ரூபத்துல வந்து கொத்திடப் போறான்னு பயம்!

அதே சமயத்துல... அந்தப் பொக்கிஷத்தை திரும்பத் தர்றதுக்கு அவரோட பேராசை இடம் கொடுக்கலை.

மார்க்கண்டேயன் குதிரையில வனாந்தரத்துல விரைந்து போனாலும்... நாக ஜோதி பெருங்குரலெடுத்து கெஞ்சினா கதறினா...

அவளோட கதறல்... வனாந்தரம் முழுவதும் திரும்பத் திரும்ப எதிரொலிச்சது.

பேராசை கண்ணை மறைச்சதால... உங்க தாத்தா அந்தக் கதறலை காதுலேயே போட்டுக்கலை.

வெகுநேரம் நாகப்பாம்போட வெட்டுப்பட்ட உடல் துடிதுடிச்சது. அப்புறம் அந்தத் துடிப்பு மெல்ல அடங்கிடுச்சு.

நாகேந்திரன் தன்னை விட்டுப் போயிட்டான்'னு தெரிஞ்சதும்... நாக ஜோதிக்கு கோபம் கிளர்ந்து விட்டு எரிஞ்சது.

வயிறெரிஞ்சு சாபம் விட்டா... என் மணாளனை விட்டுப் பிரிஞ்சு நான் எப்படி பட்டமரமாகி தவிக்கிறேனோ?

அதே மாதிரி உன் வம்சத்து பெண்களும் தவிக்கணும். கதறணும்.

எவளுக்கும் நித்ய சுமங்கலியா இருக்கிற பாக்கியம் கிடைக்காது. இந்தப் பழிபாவம்... உன்னைச் சும்மா விடாது.



என் ஸ்வாமியை வெட்டிய உன் கை... எதற்குமே உதவாது. என்னோட பாவம்... உன்னோட வம்சத்தை வாழையடி வாழையா பழி வாங்கிட்டே இருக்கும்.

நீ மட்டும் நாகமாணிக்கத்தை என்கிட்டே கொடுத்திருந்தா நான் அவரைக் காப்பாத்தியிருப்பேன்.

நானே மனம் குளிர்ந்து இதைப்போன்ற பொக்கிஷத்தை அள்ளி அள்ளித் தந்திருப்பேனே... பாவி... உன் வம்சத்துப்பெண்களுக்கு... என் நிலைமைதான் கிட்டும்...."

அப்படின்னு நாகஜோதி சபிச்சா... மலைப் பிரதேசம் முழுவதும் அது அசரீரியா ஒலிச்சது.

அதை உன் தாத்தாவும் செவி மடுத்தாரு... அப்போது அந்த சமயத்துல ஒரு வேகம் வெறி கண்ணை மறைச்சுடுச்சு... மாளிகைக்குப் போனதும்... இதை பட்டுத்துணியில பொதிஞ்சு பெட்டியில் வச்சிட்டாரு... கொஞ்ச நேரத்துலேயே... ரெண்டு கைகள் ரெண்டு கால்கள் நிமர்ன்னு செயலிழந்து போச்சு... நாக்கும் இழுத்திடுச்சு...

அவர் செய்த பாவத்துக்கு... ரொம்ப வருஷம் படுக்கையிலேயே கிடந்தாரு...

ரெண்டு மகள்கள் விதவையானாங்க... அதைப் பார்த்து கண்ணீர் தான் விட முடிஞ்சது.

இந்த நாகமாணிக்கத்தைப் பத்தி யாருகிட்டேயும் அவரால சொல்ல முடியலை...

மகள் விதவையானதும் துக்கத்துல மார்க்கண்டேயன் போய் சேர்ந்தாரு...

யாருமே இந்த பட்டுத்துணி முடிப்பை... ஒரு பொருட்டா நெனக்கலை... இதுல நாகமாணிக்கம் இருக்கிற விஷயம்.... மார்க்கண்டேய பூபதியைத் தவிர யாருக்குமே தெரியாதே...

இத்தனை தலைமுறைகள் கடந்த பின்னாடி... நீ இதைப் பார்க்கணும்னு பிராப்தம்... அதை யாரால மாத்த முடியும் ரத்னா? போதுமா விவரங்கள்... இன்னும் ஏதாவது என்கிட்டே கேட்கணுமா?"

தெய்வீகமாக ஒரு புன்னகை புரிந்தார் பெரியவர்.

''மன்னிக்க முடியாத மாபெரும் பாவத்தை... கொள்ளு தாத்தா செய்துட்டாரே?

அவரால... கிட்டத்தட்ட நாலாவது தலைமுறைக்கும் இவங்க கதறிட்டு இருக்காங்களே?

ஐயா...! பதஞ்சலி முனிவருக்கும் இதற்கும் எப்படி சம்பந்தம் வந்தது?

அவரே நேரில் காட்சியளித்து எனக்கு அசரீரியா உத்தரவிட்டு இருக்காரே?

இதற்கு என்ன காரணம்? பரிகாரத்தை செய்யறதுக்கு நான் தயாரா இருக்கேன்.

இந்த நாகமாணிக்கத்தை இவங்க கிட்டேதான் சேர்க்கும்படி... பதஞ்சலி சித்தர் சொன்னாரா?''

கேள்விகளை அடுக்கினாள் ரத்னா.

''உன்னோட ஒவ்வொரு கேள்விக்கும் பதிலைச் சொல்லிட்டே வர்றேன்...''

''பதஞ்சலி சித்தர் சிறந்த சிவபக்தர் மட்டுமில்ல... ஆதிசேஷனோட அம்சம்... நாகலோகத்துக்கு அரசர்...

நாகேந்திரனும் நாகஜோதியும் அவரோட தீவிர பக்தர்கள் மட்டுமில்ல... நாகதேவதைகளும் கூட... நான் ஏற்கனவே சொன்னேன் இல்ல? எல்லாத்துக்கும் காலநேரம் வரணும்ன்னு... இத்தனை வருஷமா நாகஜோதி கதறணும்கிறது விதி!

இவ்வளவு காலமா நாகஜோதி பதஞ்சலி சித்தர் கிட்டே தான் முறையிட்டுட்டு வர்றா...

நாகேந்திரனின் ரெண்டு துண்டாக்கப்பட்ட உடலை... மூலிகைச் சாறு பூசி பதப்படுத்தி... ஒரு குகையில பீடத்துல வச்சிருக்கா...

மார்க்கண்டேய பூபதியால தான் நாகஜோதிக்கு இந்த கதி ஏற்பட்டது... பூபதியோட வம்சத்துப் பொண்ணு நீ... அதிலேயும்... நாக சதுர்த்தியில பிறந்தவள்... நீ பரிகாரம் செய்...

எல்லாத்துக்கும் விமோசனம் ஏற்பட்டுடும்... நாகமாணிக்கத்தை நாகஜோதிகிட்டேயே ஒப்படைக்கலாம்...

பவுர்ணமியில நாக சதுர்த்தியில பிறந்த கன்னிப் பொண்ணு ரத்தம்



சிந்தணும்... கத்தி போன்ற ஆயுதங்களால ரத்தம் வர வைக்க கூடாது. உன் ரத்தம்... அந்த வெட்டுப்பட்ட உடல்லே படணும்''

நாகஜோதி பெருங்குரலில் ஓலமிட்டுக் கொண்டிருந்தாள்.

பெரியவர் கடைசியாக சொன்னதைக் கேட்டதும்... பதறிப்போய் எழுந்து நின்றான் ரகு.

ரத்னாவை பரிதாபத்துடன் நோக்கினான்.

அவனது உள்ளம் துடிதுடித்தது.

## ←←←17→→→

ஐயா! ரத்னா ஒரு அபூர்வமான பொண்ணு... இவளுக்கு ஒண்ணும் ஆகக் கூடாது. இவ ரத்தம் சிந்திதான் ஆகணுமா?

வேற வழியே இல்லையா?

உங்களுக்கு என் மனசு அப்பவே புரிஞ்சுடுச்சு. இப்போ ரத்னாவுக்கு தெரியும்படியாகவே சொல்லிடறேன்...

நான் ரத்னாவை மனதார நேசிக்கிறேன்... இவளுக்கு ஏதாச்சும் ஒண்ணுன்னா... என்னால... தாங்கிக்கவே முடியாது.

தயவு செய்து நல்ல வழியைக் காட்டுங்கய்யா...''

கைகூப்பி வேண்டிக் கொண்டான் ரகு.

ரத்னா ஸ்தம்பித்துப் போய்... எழுந்து நின்றாள்.

பெரியவர் மவுனமாய் புன்னகைத்தார்.

''அவ்வளவு பெரிய பாவம் பண்ணியிருக்காரு. நாகமாணிக்கத்தை களவாடினது பெரிய குற்றம்... உயிர்க் கொலை பண்ணினது அதை விட பெரிய குற்றம்.

எங்க வம்சத்துக்கு ஏற்பட்ட பழி பாவம் நீங்கணும்னா... இது தான் வழி... ஐயா! நான் எப்போ எங்கே ரத்தம் சிந்தணும்? தாமதிக்காம சொல்லுங்கய்யா...''

''பவுர்ணமியோட நடுநிசியில் பதஞ்சலி சித்தர் சிவ பூஜை

செய்வாரு! நடுநிசி ஆகிற வரைக்கும் காத்திருக்கணும்...

சிவபூஜை முடிஞ்சதும்... நீ பரிகாரம் பண்ணிடலாம்...''

''பாவம் நடுநிசி வர்ற வரைக்கும் நாகஜோதி கதறிட்டே இருக்கப் போறாங்க... எனக்கு உடனடியா அவங்க கதறலை நிறுத்தணும்ன்னு மனசு அடிச்சுக்குது... ஆனா... வேற வழி இல்ல...''

என்னம்மா ரத்னா? ரகு வெளிப்படையா பேசினதைக் கேட்டேயில்ல... ரகு ஒரு உத்தமமான பிள்ளை... வலை வீசி தேடினாலும் இவனைப் போன்ற கண்ணியமான இளைஞனை நீ பார்க்கவே முடியாது..

''உன் பதில் என்ன?''

''ஐயா...! நீங்க ஒரு மகான்... நீங்க சொன்னதுக்கு அப்புறம்... நான் மறுத்துப் பேசுவேனா?''

''சங்கோஜத்துடன் பார்வையைத் தாழ்த்துக் கொண்டான்.

''பொருத்தமான ஜோடி நீங்க... அமோகமா இருக்கணும்''

அவர் உளமார வாழ்த்தியதும்... சொல்லி வைத்தாற்போல் இருவரும் சேர்ந்து அவரது பாதம் தொட்டுப் பணிந்தனர்.

அதன் பின் பெரியவர் பத்மாசனத்தில் அமர்ந்து 'சிவாய நம...' என்ற பஞ்சாட்சர மந்திரத்தை ஓத ஆரம்பித்தார்.

இவர்கள் இருவரும் எதிரில் அமர்ந்து கண்களை மூடி தியானம் செய்யலாயினர்.

நேரம் நழுவியது

நடுநிசி நெருங்கியது

பெரியவர் விடு விடுவென்று நடக்கலானார்.

இவர்கள் ஓட்டமும் நடையுமாய் பின் தொடர்ந்தனர். வெகு நேரம் நடந்தபின்..

அடர்ந்த ஆல விருட்சத்தின் மறைவில் இருந்த குகைக்குள் குனிந்தபடி நுழைந்தார்.

பத்தடி தூரம் வரை குனிந்தவாறு தான் செல்ல முடிந்தது.

அதன் பின்... நிமிர்ந்து நடந்து செல்லும் வகையில் குகையின் மேற்கூரை அமைந்திருந்தது.

குகை விஸ்தாரமாக இருந்தது. தீப்பந்தம் ஒன்று வெளிச்சத்தை



விளியோகித்துக் கொண்டிருந்தது.

பீடம் போன்று அமைப்பு ஒன்று காணப்பட்டது. அதின் நிலவாக்கில்... ஒரு பேழையும் தென்பட்டது. அதன் பக்கவாட்டில் கீழே நின்றிருந்த உருவத்தைக் கண்டதும் இருவருக்கும் தூக்கி வாரிப் போட்டது.

அழகே உருவாய்... ஆனால் கண்ணீரும் கம்பளையுமாய்... வித்தியாசமான உடை அமைப்பில் நாக ஜோதி காணப்பட்டாள். ரத்னாவுக்கு அவளது கால்களில் விழுந்து கதற வேண்டும் போலிருந்தது. தயக்கம் தடைபோட கண்ணீர் மல்க கைகளைக் கூப்பியபடி நின்றிருந்தாள்.

கன்னி மூலையில்... பெரிய மேடையில் சிவலிங்கம் இருந்தது.

அதற்கு நேர் மேலே தாமிர பாத்திரம்... அதிலிருந்து சொட்டு சொட்டாய் நீர் சிவலிங்கத்தின் மீது வழிந்து கொண்டிருந்தது...

நாகஜோதி கதறலை நிறுத்திவிட்டு... பெரியவரையே கூர்ந்து பார்த்தாள்,

அவளது நீல விழிகளில் ஒரு வித பளபளப்பு தென்பட்டது. சிவலிங்கம் அமைந்திருந்த மேடையின் நான்கு மூலைகளிலும் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு பெரிய வெண்கல மணிகள் தொங்கிக் கொண்டிருந்தன. பெரியவர் மேடையருகே சென்றார்.

சிவலிங்கத்தைச் சுற்றிலும் ஏராளமான அகல் விளக்குகள் வைக்கப் பட்டிருந்தன.

பெரியவர் நெருங்கி வந்ததும்... குப்பென்று அத்தனை விளக்குகளும் சுடர் விட்டு எரிய ஆரம்பித்தன.

பெரிய பிரமாண்டமான வெண்கல மணிகள் அனிச்சையாய் ஓங்கி ஒலித்தன.

மேடையில் குவிந்திருந்த உதிரிப் புஷ்பங்களை எடுத்து சிவலிங்கத்தின் மீது வாரித் தூவினர்.

ஆரத்தி தட்டில் வைக்கப்பட்ட கற்பூரமும் அனிச்சையாய் எரியத் தொடங்கியது.

'ஓம்... நமச்சிவாய...' என்று பெரியவர் உச்சரிக்கத் தொடங்கினார்.

'என்னது இது? பதஞ்சலி சித்தர் வந்து சிவபூஜை செய்வார்' என்று பெரியவர் கூறினாரே?

இப்போது இவரே பூஜை செய்ய ஆரம்பித்து விட்டாரே?' என்று எண்ணியபடி... ரத்னாவும் ரகுவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

இருவருக்குமே ஜில்லென்று மெய் சிலிர்த்தது.

பூஜை வெகுநேரம் நீடித்தது.

மணியோசை அடங்கியது.

அதே நேரம் பலத்த இடிச் சப்தம் கேட்டது.

''ரகு! அப்போ கேட்டியே? அந்த நாசக்கார கும்பலுக்கு தண்டனை தரும்படி சொன்னியே... அவங்களுக்கு தண்டனை கிடைச்சாச்சு.

ரத்னா! உன்னைப் பின் தொடர்ந்து வந்த நாதனும் அவனது நண்பனும் கூட அழிஞ்சி போயிட்டாங்க...

என்னைப் பின் தொடர்ந்தாங்களா? ஓ... அதனால தான் என் உள்ளுணர்வு எச்சரிச்சுட்டே இருந்ததா?''

''கெடுவான் கேடு நினைப்பான்'னு சொல்வாங்கல்ல?

அவங்களோட தீய எண்ணங்களே அவங்களுக்கு எமனா ஆயிடுச்சு...''

''ரத்னா! நீ இப்போ ரத்தம் சிந்தலாம்... அதோ அந்தப் பேழையில் இருக்கிற பாம்பின் துண்டிக்கப் பட்ட உடல்லே... ரத்தம் சிந்தணும்.. ஆயுதம் ஏதும் உபயோகிக்கக் கூடாது... சொன்னபடி பாம்பின் உடலில் படும்படியாக நாகமாணிக்கத்தை வைத்தார். ரத்னா திருதிருவென விழித்தாள்.

ஆழ மூச்செடுத்து விழிகளை மூடி ஒரு கணம் யோசித்தாள். சுற்றும் முற்றும் பார்த்தாள்.

குகையின் சுவரோரமாய் சென்றாள். தலையால ஓங்கி முட்டினாள்.

விண்ணென்று வலித்தது. பலமாய் மூன்றாவது முறை மோதும் போது பொத்துக் கொண்டு ரத்தம் பீரிட்டது.

'அதைக் கையால் அழுத்தியபடி ஓடோடி வந்து... அந்தப் பேழையில் இருந்த பாம்பின் உடலில் ரத்தத்தை சிந்தினாள்.

சில கணங்களில்... துண்டிக்கப்பட்ட உடல் அதிசயமாய் ஒன்று சேர்ந்தது.

மறுகணம்... பாம்பு 'நெளுக் நெளுக்' என்று நெளிந்து வளைந்து...



சரேலென்று நிமிர்ந்து படமெடுத்து நன்றியுடன் ரத்னாவை நோக்கியது.

''நன்றிம்மா... தீர்க்க சுமங்கலியா இரு... இந்தா... இந்த பச்சலை சாற்றை பூசிக்கோ... ரத்தம் நின்று விடும்'' என்றார் நாகஜோதி.

''நன்றிங்கிற பெரிய வார்த்தையை சொல்லாதீங்கம்மா... உங்க பாதத்தை என் கண்ணீரால் கழுவினா கூட... பாவம் தீராதே...''

''தீர்ந்திடுச்சு... சென்றதைப் பத்திப் பேசாதே'' பெரியவர் அதட்டினார்.

''ஐயா! சுனையில பூக்கிற அரிய புஷ்பம் எங்கிருக்கும்?''

''குகைக்குப் பின்னாடி தான் சுனை இருக்கு. புஷ்பமும் பூத்திருக்கு... நீ எடுத்துட்டுப் போகலாம்...''

''ஐயா! பதஞ்சலி சித்தர் சிவபூஜை செய்ய வருவாருன்னு சொன்னீங்களே?'' தயக்கமாய் கேட்டான் ரகு.

நாகமாணிக்கத்தை படக்கென்று பாம்பு விழுங்கியதும்... பாம்பு மறைந்து அங்கே நாகேந்திரேன் தோன்றினான்.

''பதஞ்சலி சித்தர் தானே இப்போ சிவபூஜை செய்திருக்கார்'' என்றான் நாகேந்திரன்.

ரத்னாவும் ரகுவும் குழம்பிப் போய்... பெரியவரை ஏறிட்டார்கள். மந்தகாசமாய் நகைத்தவர்... மறுகணம் மறைந்துவிட்டார்....

அதோ அங்கே பாருங்க'' நாகஜோதி சிவலிங்கத்தை சுட்டிக் காட்டினாள்.

சிவலிங்கத்தின் கீழே மனிதத் தலை, பாம்பு உடலோடு பதஞ்சலி சித்தர் காட்சியளித்தார்.

நால்வரும் ஒரு சேர கைகளை தலைக்கு மேல் உயர்த்தி வணங்கினார்கள்.

அவர்களது தலைகளின் மீது காட்டுப் புஷ்பங்கள் அனிச்சையாய் அட்சதை போன்று உதிர்ந்தன.

தவமின்றி வரம் கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் ரகு ரத்னாவின் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டான்.

- முற்றும் -

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.